பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 99

புதன்கிழமை
05 மார்ச் 2025

மாசி 21 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

புதன்பொய்கை

## தவறி வீழ்ந்த மூதாட்டி பலி

யாழ்ப்பாணம், மார்ச் 5
மோட்டார்சைக்கிளிலிருந்து தவறி வீழ்ந்த மூதாட்டி ஒருவர் உயிரிழந்துள்ளார். சாம்பசிவம் தங்கம்மா (வயது - 79) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். 15

# ஐ.நா.வின் பரிந்துரைகளின்படி செயற்பட வேண்டும் இலங்கை!

## இணையனுசரணை நாடுகள் இறுக்கம் அநுர அரசின் முயற்சிக்கும் வரவேற்பு

கொழும்பு, மார்ச் 5

**இலங்கை அரசாங்கம் முன்னெடுக்கும் முழுமையான நல்லிணக்க மற்றும் பொறுப்புக்கூறல் செயற்பாடுகள், பாதிக்கப்பட்ட மக்களின் ஆதரவை பெற்றதாகவும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கடந்தகாலப் பரிந்துரைகளை நிறைவேற்றும் வகையிலும் அமையவேண்டும் என்று இணையனுசரணை நாடுகள் அறிவுறுத்தியுள்ளன.** 15

## தீராத் தலைவலியாக வெள்ளை ஈ!

கட்டுப்படுத்த நுட்பம் என்ன?
ஒரு நிபுணத்துவப் பார்வை!

விரிவு :- பக். 09

## படைக்குறைப்புத் தீர்மானம் அரசியல் நோக்கானதல்ல!

### அமைச்சர் நளிந்த தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 5
முப்படைகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் அரசியல் நலன்கருதிய தீர்மானம் அல்ல என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்க 12

## சங்குக் கூட்டணியோடு இணையத் தயாரில்லை

### தமிழரசின் பதில் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் பதில்



யாழ்ப்பாணம், மார்ச் 5
தமிழ்க் கட்சிகள் பல சேர்ந்து அமைத்துள்ள புதிய கூட்டணியில் இணைவதற்குத் தயாரில்லை என்று தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித் 15

## பொருளாதாரப் பின்னடைவு: சரிசெய்துள்ளது இலங்கை!

### நாணயநிதியம் பாராட்டு

கொழும்பு, மார்ச் 5
பொருளாதாரப் பின்னடைவு நிலையை இலங்கை ஓரளவு சரிசெய்துள்ளது என்று சர்வதேச நாணய நிதியம் பாராட்டுத் தெரிவித்துள்ளது. 15

### அடிப்படைவாதக் குழு

## உன்னிப்பாக கண்காணிப்பு

கொழும்பு, மார்ச் 5
கிழக்கு மாகாணத்தை மையமாகக் கொண்டு தலைதூக்கும் இஸ்லாமிய அடிப்படைவாதக் குழுவை 15

### இலங்கைச் சிறைகளிலுள்ள

## இந்திய மீனவர்களை உடன் விடுவியுங்கள்

சென்னை, மார்ச் 5
இலங்கைச் சிறையில் அடைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை விடுவிக்குமாறு வலியுறுத்தி, ராமேஸ்வரம் மீனவர்கள் நேற்றுத் திருவோடு ஏந்திப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இலங்கைக் கடற்படையால் கைதுசெய்யப்பட்டுள்ள இந்திய மீனவர்களை விடுவிக்குமாறு வலியுறுத்தி கடந்த 24ஆம் திகதி முதல் 15



## 173 கிலோ கஞ்சா வத்திராயனில் மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 5
வடமராட்சி கிழக்கு வத்திராயன் பகுதியில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை 173 கிலோ கேரளக் கஞ்சா மீட்கப்பட்டது. 15

## கைவிடப்பட்டது பணிப்புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 5
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மட்டுப்படுத்தப்பட்டளவில் மேற்கொள்ளப்பட்ட 15

### கச்சதீவுப் பெருவிழாவில்

## மூவாயிரத்துக்கு மேற்பட்ட இந்தியர்கள் குவிவார்கள்!

யாழ்ப்பாணம், மார்ச் 5
கச்சதீவுப் பெருவிழாவில் இம்முறை மூவாயிரத்துக்கும் மேற்பட்ட இந்தியர்கள் கலந்துகொள்வார்கள் 12



'எலக்சன் வந்தபிறகும் கூட உவையளின்ர கனெக்சன் இன்னும் சரிவரேல பாருங்கோ'

## செம்மணிப் புதைகுழிக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள்!

யாழ்ப்பாணம், மார்ச் 5
மனிதச் சிதிலங்கள் மீட்கப்பட்டுள்ள அரியாலை - செம்மணிப் புதைகுழியில் பொலிஸார், மற்றும் சம்பந்தப்பட்ட மயானத்தின் (சிந்துபாத்தி) அபிவிருத்திச் சங்கத்தின் உறுப்பினர்கள் இணைந்த கூட்டுப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என சட்டத்தரணியும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளருமான க.சுகாஷ் தெரிவித்துள்ளார். இந்த மனிதப் 15

### கொக்குவிலில் வாள்வெட்டு

## துண்டானது இளைஞரின் கைவிரல்!

யாழ்., மார்ச் 5
யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் உள்ள களஞ்சியசாலையில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற 15

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05.03.2025 புதன்கிழமை

| கொவிசெத | ஹந்தஹண ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத |
|---|---|---|---|---|---|---|
| திகதி 04.03.2025 | திகதி 04.03.2025 | திகதி 04.03.2025 | திகதி 04.03.2025 | திகதி 04.03.2025 | திகதி 04.03.2025 | திகதி 04.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4007 | சீட்டிழுப்பு இலக்கம் 1074 | சீட்டிழுப்பு இலக்கம் 033 | சீட்டிழுப்பு இலக்கம் 2113 | சீட்டிழுப்பு இலக்கம் 5765 | சீட்டிழுப்பு இலக்கம் 1795 | சீட்டிழுப்பு இலக்கம் 340 |
| ஆங்கில எழுத்து C | வெற்றி இலக்கினம் கடகம் | ஆங்கில எழுத்து X | ஆங்கில எழுத்து L | ஆங்கில எழுத்து P | ஆங்கில எழுத்து P | ஆங்கில எழுத்து P |
| | | | சுப்பர் இலக்கம் 18 | | | |
| வெற்றி இலக்கங்கள் 07 23 49 73 | வெற்றி இலக்கங்கள் 39 42 46 52 | வெற்றி இலக்கங்கள் 6 1 3 8 | வெற்றி இலக்கங்கள் 17 29 51 64 | வெற்றி இலக்கங்கள் 7 2 6 4 7 1 | வெற்றி இலக்கங்கள் 18 55 64 78 | வெற்றி இலக்கங்கள் 6 4 7 1 |
| விசேட எழுத்து C | | | | | விசேட எழுத்து P | |

# கொள்கையற்ற தரப்புகளுடன் கூட்டணியில் இணையோம்

## கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச். 5

**தமிழ்த் தேசியக் கொள்கைப்பிடிப்புடன் பயணிக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கொள்கையற்ற தரப்புகளின் கூட்டணி முயற்சியில் இணையாது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.**

இலங்கைத் தமிழரசு கட்சி மற்றும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி என்பன கூட்டணியை உள்ளூராட்சித் தேர்தலில் இணையும் முயற்சிகளை எடுத்து வருகின்றது. இதுகுறித்து முன்னணிக்கு அழைப்பு விடுக்கபட்டதா? அல்லது உங்களுடைய நிலைப்பாடு என்ன? என்பது தொடர்பில் ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கொள்கையளவில் ஓர் இணக்கப்பாட்டை எட்டுவதற்கே இணங்கினோம். கொள்கையளவில் இணங்குகின்ற போதே அது மக்கள் ஏற்கக்கூடியதாக இருக்கும் ஜனாநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியானது தமிழ்த் தேசத்தைக் காட்டி கொடுத்த தரப்புகளையும் கூட அழைத்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது. அந்தப் பேச்சுகளுக்கு எந்த அழைப்பும் எமக்கு விடுவிக்கப்படவில்லை. தமிழ்த் தேசிய மக்கள் முண்ணனி சமஷ்டி, தமிழ் தேசிய அங்கீகாரம், சுயநிர்ணயம் ஆகிய கோட்பாடுகளின் கொள்கைபிடியில் உள்ளது.

இலங்கை தமிழரசுக் கட்சி இன்று ஜனநாயகத்தமிழ்க்தேசியகூட்டணியுடன் கூட்டுச்சேர அழைப்பு விடுத்துள்ளது. ஆகவே கொள்கையற்ற எண்ணிக்கையின் ஒருமைப்பாட்டை மக்களுக்குக் காண்பித்து தேர்தலை எதிர்கொள்ள மேற்கொள்ளப்படும் முயற்சியாகவே இதனை நாம் எண்ணமுடியும்.

நாம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் இருந்து பிரிந்தமைக்கு பிரதான காரணமே கொள்கைப் பிரச்சினைதான். கூட்டமைப்பில் உள்ள அங்கத்தவர்கள் கொள்கைப் பிடிப்புடன் இருந்தபோது கூட்டமைப்பின் வெற்றிக்காக நாம் பாடுபட்டோம். அதேபோல தமிழ்மக்கள் பேரவையிலும் கொள்கை ரீதியான இணக்கப்பாடு இருந்த காலப்பகுதியில் நாம் மிகத்தீவிரமாகப் பணியாற்றினோம்.

அந்தவகையில் கொள்கையில் பிடியாக உள்ள நாம் தேர்தல் காலத்தில் மாத்திரம் கொள்கையற்று இணையமுடியாது - என்றார். (ச-125)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி 04.03.2025 | தினம் செவ்வாய்க்கிழமை | வெற்றி வாரம் 0473 |
| ஆங்கில எழுத்து O | வெற்றி இலக்கம் 8 7 7 3 6 5 | |

| Super Ball DLB | | | |
|---|---|---|---|
| திகதி 04.03.2025 | தினம் செவ்வாய்க்கிழமை | | |
| சீட்டிழுப்பு வாரம் 2739 | ஆங்கில எழுத்து E | வெற்றி இலக்கம் 07 15 24 60 | |

| சனிதா DLB | | |
|---|---|---|
| திகதி 04.03.2025 | தினம் செவ்வாய்க்கிழமை | |
| ஆங்கில எழுத்து S | வெற்றி இலக்கம் 07 11 28 46 | வெற்றி வாரம் 4900 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி 04.03.2025 | தினம் செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் 0635 | வெற்றி இலக்கம் 09 19 28 |

| லக்ன ராசி DLB | | |
|---|---|---|
| திகதி 04.03.2025 | தினம் செவ்வாய்க்கிழமை | |
| மீனம் | வெற்றி இலக்கம் 22 27 57 60 | சீட்டிழுப்பு வாரம் 4451 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி 04.03.2025 | தினம் செவ்வாய்க்கிழமை | | |
| ஆங்கில எழுத்து H | சுப்பர் இலக்கம் 24 | வெற்றி இலக்கம் 10 17 63 73 | வெற்றி வாரம் 1915 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| திகதி 04.03.2025 | தினம் செவ்வாய்க்கிழமை | |
| ஆங்கில எழுத்து V | வெற்றி இலக்கம் 05 19 27 60 | வெற்றி வாரம் 2565 |

# தேசிய நல்லிணக்கம் ஜப்பான் வரவேற்பு

கொழும்பு, மார்ச் 5

தேசிய நல்லிணக்கம் தொடர்பில் இலங்கை அரசாங்கம் எடுத்துவரும் முயற்சிகளை வரவேற்பதாக ஜப்பான் தெரிவித்துள்ளது.

ஜெனீவாவில் தற்போது இடம்பெற்று வரும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் 58 ஆவது கூட்டத்தொடரில் ஜப்பான் இவ்வாறு தெரிவித்துள்ளது.

இலங்கையின் வடக்கு- கிழக்கு பகுதிகளில் உண்மை,நல்லிணக்கம் என்பவற்றை வலியுறுத்தும் நோக்குடன் இலங்கை அரசாங்கம் எடுத்து வரும் முயற்சிகள் வரவேற்கத்தக்கது. அதற்கமைய தேசிய நல்லிணக்கம், நம்பிக்கையை கட்டியெழுப்புதல் போன்ற மனித உரிமை விவகாரங்களில் இலங்கை அரசாங்கம் எடுத்து வரும் உள்ளூர் பொறிமுறையிலான நடவடிக்கைகளுக்கு ஜப்பான் ஆதரவளிக்கும் என்றும் ஜப்பான் தெரிவித்துள்ளது. (ச-6)

# தமிழரசுக் கட்சி கொழும்பிலும் போட்டி

கொழும்பு, மார்ச் 5



உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கொழும்பு வாழ் தமிழ் மக்களைப் பிரதிநிதித்து வப்படுத்திக் கொழும்பில் போட்டியிட விரும்பும் வேட்பாளர்களிடமிருந்து இலங்கைத் தமிழரசுக் கட்சி விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

கட்சியின் மத்திய செயற்குழுவில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று இலங்கைத் தமிழரசுக்கட்சியின் கொழும்புக்கிளைத் தலைவர் சி. இரத்தினவடிவேல் தெரிவித்துள்ளார். (எ-இ)

# வருமான இலாபத்துக்கே வரி அறவிடப்படும்

## அரசாங்கம் விளக்கம்

கொழும்பு, மார்ச். 5

சேவை ஏற்றுமதி வரியானது குறிப்பிட்ட சில பிரிவினருக்கே அறவிடப்படுவதுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் அல்லது நபர்களின் இலாபத்தின் மீதே அந்த வரி அறவிடப்படுகின்றது என்றும் உள்நாட்டு இறைவரி திணைக்களப் பிரதி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் விளக்கமளிக்கையில், கட்டட பட வரைஞர்கள், நிதி ஆலோசகர்கள், வாடிக்கையாளர் சேவை வழங்குநர்கள், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் யூரியூப்பர்கள் போன்றவர்களிடமிருந்தே சேவை ஏற்றுமதி வரி அறவிடப்படவுள்ளது.

இவர்களிடமிருந்து நேரடியாக சம்பளத்திலிருந்தோ, மொத்த வருமானத்திலிருந்தோ அறவிடப்படமாட்டாது.

18 இலட்சம் ரூபாவை வருடாந்த இலாபமாகப் பெறும் நிறுவனங்களிடமிருந்தே வரி அறவிடப்படும்.

முதல் பத்து இலட்சத்துக்கும் 6 வீத வரியும் மேலதிக தொகைக்கு 15 வீத வரியும் அறவிடப்படும். பதிவு செய்யப்பட்ட கம்பனிகளிடமிருந்து 15 வீத வரி அறவிடப்படும். உள்நாட்டிலிருந்து சேவை வழங்குபவர்களிடமிருந்து 6 வீதம் தொடக்கம் 36 வீதம் வரை வரி அறவிடப்படும் - என்றார். (ச-25, 6)

# எரிபொருள் விநியோகஸ்தர்கள் புதிய சூத்திரத்துக்கு உடன்பாடு!

## அமைச்சர் நளிந்த தெரிவிப்பு

கொழும்பு, மார்ச். 5

இலங்கை பெற்றோலியகங் கூட்டுத்தாபனம் முன்வைத்த புதிய சூத்திரத்துடன் எரிபொருள் விநியோகஸ்தர்கள் தங்கள் உடன்பாட்டை வெளிப்படுத்தியுள்ளனர் என்று அமைச்சரவை ஊடகப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

செயற்படுத்தப்படும் புதிய சூத்திரம் தொடர்பில் விநியோகஸ்தர்களின் முன்மொழிவு குறித்து கலந்துரையாட 18 ஆம் திகதி மற்றொரு கலந்துரையாடல் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிமுகப்படுத்திய சூத்திரத்தை செயற்படுத்த ஒரு ஒப்பந்தம் எட்டப்பட்டுள்ளது. அந்த ஒப்பந்தத்தின் படி இனிமேல் தொடரும் எவ்வித எரிபொருள் பிரச்சினை இல்லை என்றும் குறிப்பிட்டார். (ச-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மாவட்டத்தின் மூலோபாயத் திட்டம் காலாவதி

## யாழ். பதில் மாவட்டச் செயலர் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், மார்ச் 5**
**யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தின் மூலோபாயத் திட்டம் காலாவதியாகியுள்ளது என்று யாழ்ப்பாணம் பதில் மாவட்டச் செயலர் ம.பிரதீபன் தெரிவித்துள்ளார்.**

அண்மையில் நடைபெற்ற யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பங்கேற்ற நாடாளுமன்ற உறுப்பினர் இ.அர்ச்சுனா, மாவட்டத்தின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பில் மூலோபாயத் திட்டமிடல் உள்ளதா? என்று கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளிக்கும்போதே பதில் மாவட்டச் செயலர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எமது மூலோபாயத் திட்டம் 5 ஆண்டுகளுக்குத் தயாரிக்கப்பட்டிருந்தது. அது 2024ஆம் ஆண்டுடன் காலாவதியாகியுள்ளது. அடுத்த ஆண்டுக்குரிய மூலோபாயத் திட்டமிடல் இதுவரை தயாரிக்கப்படவில்லை. ஒவ்வொரு துறைசார்ந்து எதிர்காலத்தில் மூலோபாயத் திட்டங்கள் வகுக்கப்படவுள்ளன என்றார். அதன்பின்னர் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் இ.அர்ச்சுனா, காலி மாவட்டத்தில் 2032ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய மூலோபாயத் திட்டமிடல் காணப்படுகின்றது. ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களை வினைத்திறனாக நடத்துவதற்கும், அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக சிறந்த தீர்மானங்களை மேற்கொள்ளவும் விரைவாக மூலோபாயத் திட்டங்களைத் தயாரிக்கவேண்டும் என்று குறிப்பிட்டார். (எ-125)

# விமானப் படைக்கு புதிய தளபதி

கொழும்பு, மார்ச் 5
இலங்கை விமானப்படையின் புதிய தலைமைத் தளபதியாக எயார் வைஸ் மார்ஷல் லசித சுமனவீர நியமிக்கப்பட்டுள்ளார். நேற்றுமுதல் நடைமுறைக்குவரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்று இலங்கை விமானப்படை தெரிவித்துள்ளது.

தற்போது விமானப்படை நடவடிக்கைகளுக்கான பணிப்பாளர் நாயகமாகப் பணியாற்றும் ஏர் வைஸ் மார்ஷல் லசித சுமனவீர, 1991 ஆம் ஆண்டு இலங்கை விமானப்படையில் இணைந்தார். இலங்கை விமானப்படையின் தலைமை அதிகாரியாகப் பணியாற்றிய ஏர் வைஸ் மார்ஷல் சம்பத் விக்ரமரத்ன நேற்று முன்தினம் சேவையில் இருந்து ஓய்வு பெற்றதை அடுத்துப் புதிய நியமனம்வழங்கப்பட்டுள்ளது. (எ-இ)



# பல்கலை ஊழியர்களால் கவனவீர்ப்புப் போராட்டம்

யாழ்ப்பாணம், மார்ச். 5
நாடளாவியரீதியில் உள்ள அரச பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் பல்கலைக்கழக ஊழியர்களால் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சம்பள உயர்வு, ஆட்சேர்ப்பு, மேலதிகநேரக் கொடுப்பனவு, வரவு - செலவுத் திட்டத்தில் சம்பள முரண்பாட்டுக்கு உரிய தீர்வின்மை உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

'சம்பளத்தைப் பொய்யாக உயர்த்தாதே', 'பதவி வெற்றிடங்களை உடனடியாக நிரப்பு', 'இடமாற்ற விண்ணப்பங்களுக்கு நடவடிக்கை எடு', 'பொதுச் சேவைக்கு 64%', 'எங்களுக்கு 58% நீதியா!', ஓடி வீதத்தை மாற்றாதே, போன்ற கோஷங்கள் போராட்டக்காரர்களால் எழுப்பப்பட்டன.

யாழ்ப்பாணம், வவுனியா உள்ளிட்ட பல்கலைக்கழகங்களிலும் இந்தப் போராட்டம் இடம்பெற்றது. (ச-125,27, 110-20)



# மின்கம்பத்துடன் மோதி மோ.சைக்கிள் விபத்து

யாழ்ப்பாணம், மார்ச். 5
வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்றில் மின்கம்பத்துடன் மோதி மோட்டார்சைக்கிள் ஒன்று நேற்று விபத்துக்குள்ளாகியுள்ளது. அதிக வேகமே விபத்துக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது. விபத்தில் காயமடைந்த இருவர் மருதங்கேணி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-27)

# ஜப்பான் வாகனங்கள் முதல்தொகுதி வந்தடைவு

கொழும்பு, மார்ச்.5
புதிய அரசாங்கம் வாகன இறக்குமதித் தடையை நீக்கியதையடுத்து 196 ஜப்பானிய வாகனங்கள் முதல்தொகுதியில் அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கு எடுத்துவரப்பட்டுள்ளன.
முதல் தொகுதியில் எடுத்துவரப்பட்ட வாகனங்களில் லாண்ட் குரூசர்கள், ஹிலுக்ஸ் கப், பிரடோ, டொயாட்டோ சுவ், சுசுகி அல்டோ கார்கள் என்பன அடங்கும்.
பத்து மில்லியன் டொலர் முதலீட்டில் வாகனங்களை இறக்குமதி செய்யவுள்ளதாக வாகன இறக்குமதியாளர் சங்கம் தெரிவித்துள்ளது. (ச-41-8)




"என்ன பிடிக்கிறாய் அந்தோனி
எலி பிடிக்கிறேன் சிஞ்ஞோரே
பொத்திப் பொத்திப் புடி அந்தோனி
பூறிக் கொண்டோடுது சிஞ்ஞோரே"

இந்தப் பாட்டு கனபேருக்கு மறந்துபோயிருக்கும். வெள்ளைக்காரர் எங்களை ஆண்ட காலத்தில அவையை நக்கலடிச்சு பாடின பாட்டுகளில இதுவுமொண்டு. எலக்சன் அறிவிச்சபிறகு எங்கட கட்சியள் ஓடித்திரியிறதைப் பாக்க இந்தப்பாட்டுத்தான் ஞாபகத்துக்கு வந்தது. இதில எப்பிடி பொத்திப் பிடிச்சாலும் எலி பூறிக்கொண்டு ஓடிச்சுதோ அப்பிடி கனக்கக் கட்சியளின்ர வேட்பாளர்மாரும் பூறிக்கொண்டு ஓடுகினமாம். போனமுறை உள்ளூராட்சி எலக்சனுக்கு வேட்புமனுவில கையெழுத்துப் போட்ட கனபேர் இப்ப கனடாவில இருக்கினம். அதையும் தாண்டி இஞ்ச மிஞ்சி இருக்கிறவையும் எங்காலிப்பக்கம் காத்தடிக்குதோ அங்காலிப் பக்கமா தாவிறதுக்கு ரெடியாகினமாம். அதிலையும் கூடுதலான பாதிப்பு வீட்டுக்கட்சிக்குத்தான். அந்தக் கட்சியில போனமுறை எலக்சன் கேட்ட சிலர் வேற கட்சியளில இந்தமுறை கேக்கப்போயினமாம். ஏனெண்டால் பார்லிமெண்ட் எலக்சனில ஈஸியா வெல்லக்கூடிய இடங்களிலகூட வீட்டுக்கட்சி மண் கௌவினது. அதுக்கு முக்கியமான காரணம், வீடு ரண்டாப் பிரிஞ்சு நிண்டு ஆளையாள் முதுகில குத்திக்கொண்டிருக்கிறதுதான். இப்ப அந்தக் கொழுவல் இன்னும் கூடிப்போய் நிக்குது. அதால "அற்றகுளத்து அறுநீர்ப்பறவை மாதிரி" இப்பவே அங்கையிருந்து கிளம்பி, எந்தப் பக்கம் நல்ல'திசை' தெரியுதோ அங்க போய் ஒட்டிக்கொண்டால்தான் வெல்லலாம் எண்டு நினைக்கினம். அதால வீடே வெறிச்சோடிப்போய் இருக்குது.

அதைவிட போனமுறை பார்லிமெண்ட் எலக்சனில வீட்டுக் கட்சியின்ர உடையார், காடு மேடெல்லாம் தேடி, கண்டுபிடிச்ச பெண் வேட்பாளர் ஒராள் உள்ளூராட்சி எலக்சனில திசைகாட்டியில நிக்கிறதுக்கு ஓடுப்பட்டுத்திரியிறா எண்டும் கதை. அதைவிட இளம்பெடியள் ஆருமே வீட்டுக்காரர் வெத்திலை பாக்கு வைச்சுக் கூப்பிட்டாலும்கூட, வருகினமில்லையாம். இப்பிடி வேட்பாளர்மாரை வலைவீசிப் பிடிச்சாலும், பிறகு அவையின்ர மண்டையை வேறகட்சிக்காரர் கழுவிறதால எலி மாதிரி பூறிக்கொண்டோடுகினமாம். நிலைமை இப்பிடி இருக்க, ஏதோ தங்கட கட்சியில எலக்சன் கேக்க லைனில ஆக்கள் நிக்கிறமாதிரி அந்தக் கட்சியின்ர உடையார் நினைக்கிறாராம். அப்பிடி ஒரு காலமும் இருந்ததுதான். வீட்டுச் சின்னத்தில தும்புத்தடியை நிப்பாட்டினாக்கூட வெல்லுற அந்தக்காலம் எப்பவோ மலையேறிப்போட்டுது.

இது விளங்காமல், எலக்சனில ஆரைத் தெரிவு செய்யோணும், எப்பிடித் தெரிவு செய்யப்போயினம் எண்டு ஒவ்வொரு மாவட்டக்கிளைக்கும் கடிதம் அனுப்பியிருக்கிறாராம் வீட்டுக்கட்சி உடையார். அந்தக் கடிதத்தில ஆயிரத்தெட்டு கொண்டிசன்கள் போட்டிருக்கிறாராம். அந்தக் கொண்டிசன்களைப் பாக்கேக்க இவ்வளவு நாளும் சடையார் பக்கமா நிண்டவைக்கு கடைசிமட்டும் சீற் குடுக்கமாட்டினம் எண்டு வடிவாத் தெரியுது. அதோட போனமுறை கிளிநொச்சியில வண்டில் விட்டு சுயேச்சையாக் கேட்ட தன்ர கைப்பிள்ளைகளையும் எப்பிடியாவது இந்த எலக்சனில வீட்டுக்கட்சியில போட்டிபோட வைக்கிறதுதான் உடையாரின்ர திட்டமாம். ஆனால் பகிடி என்னெண்டால், போனமுறை பார்லிமெண்ட் எலக்சனில சுயேச்சையா எலக்சன் கேட்டவையை க்ட்சியை விட்டுத் தள்ளிவைக்கிறதுக்கான கடிதம் போயிருக்காம். ஏனெண்டால் எலக்சன் பற்றின வர்த்தமானியில அவையின்ர பேர் வந்திருக்காம். அப்பிடியெண்டால் போனமுறை உள்ளூராட்சித் தேர்தலில வீட்டுக்கட்சிக்கு எதிரா வண்டில் விட்ட சுயேச்சைக்குழுக்காரரையும் எல்லோ வீட்டுக்கட்சி தள்ளிவைச்சிருக்கோணும், ஆனால் அப்பிடிச் செய்யாயினம். ஏனெண்டால் அப்பிடி வண்டில் விடச்சொன்னதே உடையார் தானாம்.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய

(ராசிபலன்)

**மேடம்:** தெய்வ அனுகூலம் உண்டாகும். ஆனால், புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சியுடன் செலவுகளும் ஏற்படக்கூடும்.

**இடபம்:** தாயின் உடல்நலனில் கவனம்தேவை. தாய்மாமன்வழியில் எதிர்பார்த்த காரியம் முடிவதில் தாமதம் ஏற்படும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் சிறு சிறு பிரச்சினைகள் ஏற்பட்டாலும், அதனால் பாதிப்பு எதுவும் இருக்காது.

**மிதுனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். தாய்மாமன்வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கடகம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வருகையால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். இரவுநேரத்தில் வெளியூர்ப்பயணம்மேற்கொள்வதைத்தவிர்க்கவும். தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**சிம்மம்:** இன்று எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டும். மற்றவர்களுடன் வீண் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும். சிலருக்கு கோயில்களுக்குச் சென்று பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**கன்னி:** மனதில் இனம்தெரியாத சஞ்சலம் ஏற்படக்கூடும். புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். உறவினர்களுடன் பேசும்போது பதற்றம் வேண்டாம். வாகனத்தில் செல்லும்போது கவனமாக இருக்கவும்.

**துலாம்:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். மனதில் தைரியம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** உற்சாகமான நாள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். முக்கிய முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும்.

**தனுசு:** உறவினர்களுடன் அனுசரணையாக நடந்துகொள்ளவும். புதியமுயற்சி சாதகமாக முடியும். கணவன் மனைவிக்கிடையே கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது.

**மகரம்:** உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு சிலருக்கு ஏற்படக்கூடும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்:** எதிலும் வெற்றியே ஏற்படும் நாள். மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையால் எதிர்பாராத பொருள்சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு.

**மீனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பாராத செலவுகளால் சிலர் கடன்வாங்கவும் நேரிடும். கூடுமானவரை வெளியூர்ப்பயணம் மேற்கொள்வதைத் தவிர்த்துவிடவும்.



இணுவில் பொதுநூலகத்தினரின் பங்களிப்புடன், இணுவில் திறன்விருத்தி மையச் சிறுவர்களின் கால்கோள்விழா, அண்மையில் நடைபெற்றது. (ச-25)

## நிர்வாகத்தெரிவு

வவுனியா, மார்ச் 5

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தின் புதிய நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இரண்டு வருட ஆட்சிக்காலத்தைக் கொண்ட புதிய நிறைவேற்று நிர்வாகக் குழுவில் தலைவராக க.ஹரிபிரசாத், செயலாளராக த.யசோதரன், பொருளாளராக எஸ். காண்டீபன், சிரேஸ்ட உபதலைவராக கு.கிஷோக்குமார், வெளிநாட்டுத் தொடர்புகளுக்கான உபதலைவராக ந.கபிலநாத், பாடசாலைத் தொடர்பு மற்றும் கலை கலாசார உபதலைவராக செ.சந்திரகுமார், விளையாட்டுத்துறைக்கான உபதலைவராக த.கமலன், பழைய மாணவர் நிகழ்ச்சிக்கான உபதலைவராக க.ஞானசூரியன், உப செயலாளராக பா.செல்வஉதயம் ஆகியோரும் உறுப்பினர்களாக திருமதி ம.தயூசிகா, அ.நித்திலா, ஆர்.தசிதரன், எம்.பி.நடராஜ், ஜே.கோபிநந்தன், க.துசியந்தன், எஸ்.டிஷாந்தன், ஏ.அனுசியன், எஸ். றஜீந்தன், எஸ்.உனுஜன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

(ச-41-110)

## 'வடந்தை' நூலுக்கு ஆக்கங்கள் கோரல்


யாழ்ப்பாணம், மார்ச். 5

வடக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் அலகால், வருடந்தோறும் வெளியிடப்படும் வடக்கு மாகாணப் பண்பாட்டம்சங்களை உள்ளடக்கிய 'வடந்தை' நூலுக்காக ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன. கலை, பண்பாடு, ஆராய்ச்சி, சமூகவியல், தொல்லியல் மற்றும் வரலாறு போன்ற விடயப்பொருள்களில் ஆக்கங்கள் அமையலாம். ஆக்கங்கள் அனைத்தும் வடமாகாணம் சார்ந்ததாகவும், அரசியல் கலப்பற்றதாகவும் இருக்கவேண்டும். தனிப்பட்ட நபரைப் பாதிக்காத கருத்துகளை முன்வைக்கவேண்டும்.

ஒருவர் ஒரு கட்டுரை மட்டுமே சமர்ப்பிக்கலாம். பத்திரிகைகளிலோ சஞ்சிகைகளிலோ பிரசுரமாகாததாக இருத்தல் வேண்டும். கணினித் தட்டச்சுச் செய்யப்பட்ட மென்பிரதிகளாகவோ அல்லது வன்பிரதிகளாகவோ இருக்கலாம்.

ஆக்கங்களைச் சமர்ப்பிக்க விரும்புவோர் ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் கணினித் தட்டச்சுச்செய்யப்பட்ட மென்பிரதிகளை NPC.CULTURE@YAHOO.COM எனும் மின்னஞ்சல் முகவரிக்கும், வன்பிரதிகளை பிரதிக்கல்விப்பணிப்பாளர் பண்பாட்டலுவல்கள் அலகு, கல்வி அமைச்சு, செம்மணி வீதி, நல்லூர் எனும் முகவரிக்கும் அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)

## வாழைக்குலை விலை சரிவு



யாழ்ப்பாணம், மார்ச். 5

கடந்த சில நாள்களாக நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக வாழைச்செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாக செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர். அதிக பனி காரணமாக வாழைக்காய்கள் திடீரென மரத்திலேயே பழுத்துவிடு கின்றன. இதனால் கூடுதலான வாழைக்குலைகள் சந்தைக்குக் கொண்டுவரப்படுகின்றன. இதனால் அவற்றின் விலை சரிவடைந்து காணப்படுகின்றது. எனினும் அடுத்துவரும் மாதங்களில் வாழைப்பழங்களுக்குப் பற்றாக்குறை ஏற்படும் நிலையில் அவற்றின் விலை உயரலாம் என செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-25, 17)

## தொழிற்சந்தை

யாழ்ப்பாணம். மார்ச் 5

யாழ்.மாவட்டச்செயலகத்தின் மாவட்டத் தொழில் நிலையம் 40க்கும் மேற்பட்ட தொழில் நிறுவனங்களை ஒருங்கிணைத்து எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30மணி முதல் மதியம் 1.30மணிவரை மாபெரும் தொழிற்சந்தை நிகழ்வை மாவட்டச் செயலக வளாகத்தில் நடத்தவுள்ளது.

இந்தத் தொழிற்சந்தையில் பங்கேற்கும் நிறுவனங்கள் 500க்கும் மேற்பட்ட வெற்றிடங்களுக்கான நேர்முகத் தேர்வை அன்றையதினமே நடத்தவுள்ளன.

நிகழ்வில் தொழில்தேடும் இளையோர்கள் தங்களது தகமைகளை நிரூபிக்கக் கூடிய ஆவணங்களுடன் கலந்துகொள்வதன் மூலம் பொருத்தமான தொழில் ஒன்றினைப் பெற்றுக்கொள்ளலாம் என யாழ். மாவட்ட பதில் செயலர் ம. பிரதீபன் தெரிவித்துள்ளார். மேலதிக தகவல்களுக்கு 0212219359 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகத் தொடர்புகொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## இடமாற்றம்

சாவகச்சேரி, மார்ச். 5

சாவகச்சேரி நுணாவில் கிழக்கில் இயங்கி வந்த சாவகச்சேரி சமுர்த்தி வங்கி நேற்று முன்தினம் திங்கட்கிழமை தொடக்கம் நுணாவில் மேற்கு 190 ஆம் கட்டை ஏற்றத்தடியிலுள்ள (சாவகச்சேரி நகரசபை சிறுவர் பூங்காவுக்கு அருகில்) தனியார் கட்டடத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)

## எரிபொருள் நுகர்வு யாழில் திடீர் வீழ்ச்சி

யாழ்ப்பாணம், மார்ச்.5

எரிபொருள் விற்பனை நிலையங்களில் எரிபொருள்களின் நுகர்வில் திடீர் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் எரிபொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் எனத் தகவல் வெளியானதைத் தொடர்ந்து மக்கள் நீண்டவரிசையில் காத்திருந்து எரிபொருள்களைப் பெற்றுச்சென்றனர்.

இந்நிலையில் தற்போது எரிபொருள் விற்பனை நிலையங்களில் எரிபொருள் விற்பனை வீழ்ச்சியடைந்துள்ளதுடன் நுகர்வோர் இன்றி எரிபொருள் விற்பனை நிலையங்கள் வெறிச்சோடிக் காணப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-41-17)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

ஒவ்வொரு காலையும் உங்கள் குறிக்கோளை பலப்படுத்திக் கொள்ளுங்கள் ஒவ்வொரு மாலையும் ஓரளவு வேலை முடிந்திருப்பதைக் காணலாம்.

– கதே–

# கைநழுவுமா தமிழ்த்தேசியம்?

நீண்டகால தாமதத்துக்குப் பின்னர் உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் கோரும் திகதியை அறிவித்திருக்கின்றது தேர்தல்கள் ஆணைக்குழு. ஆகையால் எதிர்வரும் ஏப்ரல் மாத இறுதிக்குள் உள்ளூராட்சித்தேர்தல்நடப்பது உறுதியாகியிருக்கின்றது. வேட்புமனுக்களை எதிர்வரும் 17ஆம் திகதி முதல் தாக்கல் செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டிருப்பதால், நாட்டில் மெல்ல மீண்டும் தேர்தல் காய்ச்சல் அடிக்க ஆரம்பித்திருக்கின்றது. உள்ளூராட்சித் தேர்தல் 'குட்டித்தேர்தல்' என்று கூறப்பட்டாலும், உள்ளூராட்சித் தேர்தல் மக்களுக்கும், அரசியல் கட்சிகளுக்கும் முக்கிய மானது. உள்ளூராட்சிச்சபைகளின் இயக்கமே பிரதேசத்தின் அபிவிருத்திக்கும், முன்னேற்றத்துக்கும் அடித்தளம். பிரதேசத்தின் தேவைகளை, மக்களின் பிரச்சினைகளை இனங்கண்டு தீர்ப்பதற்கு உள்ளூராட்சிச்சபை உறுப்பினர்களுக்குப் பெரும் பங்கு இருக்கின்றது. அதேபோன்று அரசியல் கட்சிகளுக்கும் உள்ளூராட்சிச்சபைகளை அவர்களின் அரசியல் செயற்பாடுகளுக்கான அடித்தளம் என்று கூறலாம். உள்ளூராட்சிச் சபைகளைக் கைப்பற்றுவதன் ஊடாக அவர்கள் தங்கள் அரசியல் கொள்கைகளை மக்கள் மத்தியில் இலகுவாகக் கொண்டுசெல்லமுடியும். அதேபோன்று உள்ளூராட்சிச் சபைகளைக் கைப்பற்றிக் கொண்டால் அடுத்துவரும் தேர்தல்களை இலகுவாகக் கையாளமுடியும் என்பது அரசியலில் இருப்பவர்களுக்குத் தெரியும்.

ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல்களில் அமோக வெற்றியீட்டிய தேசிய மக்கள் சக்தி, உள்ளூராட்சிச் சபைத் தேர்தலையும் வேக வேகமாக நடத்த முற்படுவதும் இதனாலேயே. மக்கள் மத்தியில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும், தேசிய மக்கள் சக்திக்கும் இருக்கும் ஆதரவு அலை தணியமுன்னர் உள்ளூராட்சிச்சபைத் தேர்தலை நடத்தி, உள்ளூராட்சிச் சபைகளையும் தங்களின் கைக்குள் கொண்டுவரும் திட்டம் நிச்சயம் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திடம் இருக்கும். அதிலும் ஜனாதிபதித் தேர்தலிலும், பொதுத் தேர்தலிலும் வடக்கில் இருந்து கிடைத்த எதிர்பாராத ஆதரவை, உள்ளூராட்சித் தேர்தலிலும் தக்கவைத்துக் கொள்ள அநுர அரசாங்கம் தீவிரமாகவிருக்கும் என்பதையும் மறுக்கமுடியாது. ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் என்பவற்றைப் போன்றதல்ல உள்ளூராட்சித் தேர்தல் என்பதால் மக்கள் சிந்தித்து வாக்கிடவேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றனர்.

கடந்த தேர்தல்களில் வடக்கில் கணிசமான மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்திருந்தமை விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட்டிருந்தாலும், அதற்கான முற்றுமுழுதான பொறுப்பை தமிழ் அரசியல் கட்சிகளே ஏற்றுக்கொள்ளவேண்டும். கடந்தகாலங்களில் மக்கள் நலனை முன்னிறுத்திச் செயற்படாது, கட்சி நலன்களை முன்னிறுத்திச் செயற்பட்டதன் அறுவடையையே கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்க் கட்சிகள் பெற்றிருந்தன. தற்போது உள்ளூராட்சிச்சபைத் தேர்தல் நடக்கவுள்ள நிலையில், தமிழ்க் கட்சிகள் தங்கள் தவறைத் திருத்திக்கொள்ளாவிட்டால், கடந்த தேர்தல்களில் ஏற்பட்ட கசப்பாக அனுபவத்தை மீண்டும் சந்திக்கவே நேரும். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வேட்பாளர்களை நியமிப்பதில் காட்டப்பட்ட அசிரத்தை, மக்களின் விருப்பறிந்து செயற்பட மறந்தமை தமிழ்க் கட்சிகளுக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியிருந்தது. எதிர்வரும் உள்ளூராட்சிச்சபைத் தேர்தலில் வேட்பாளர்களைத் தெரிவுசெய்வதில் - மக்களுக்கு சேவையாற்றுபவர்களை இனங்கண்டு வேட்பாளர் ஆக்குவதில் பெறும் வெற்றியே, தேர்தல் முடிவுகளில் பிரதிபலிக்கவிருக்கின்றது.

உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்க் கட்சிகள் சூதானமாகச் செயற்படாவிட்டால், உள்ளூராட்சிச் சபைகளும் பறிபோகும் அவலநிலைமையே ஏற்படும். எனவே அரசியல் கட்சிகள் பொறுப்புடன் நடந்துகொள்ளாது, மக்கள் மீது குற்றஞ்சுமத்துவது நியாயமாகாது. தமிழ் அரசியல் கட்சிகளின் பொறுப்பற்றதனத்தால், உள்ளூராட்சிச் சபைகளும் பறிபோகுமானால் தமிழ்த் தேசிய அரசியலுக்கான அடித்தளம் தமிழ் மக்கள் கைகளில் இருந்து நழுவிச்சென்றுவிடும் என்ற உண்மையை அரசியல் கட்சிகளும், தமிழ் மக்களும் உணர்ந்து செயற்படுவது அவசியம்.




# மார்ச் 9ஆம் திகதிமுதல் வடக்கில் மீண்டும் மழை!

யாழ்ப்பாணம், மார்ச் 5

மார்ச் மாதம் 9ஆம் திகதிமுதல் 14ஆம் திகதிவரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பல பகுதிகளிலும் மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல்துறையின் தலைவரும், வானிலை ஆய்வாளருமான நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டிகளையும் மேற்குறிப்பிட்ட நாள்களைக் கருத்தில் கொண்டு திட்டமிடுவது சிறந்தது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் மார்ச் மாத மழை வீழ்ச்சியானது அயன இடை ஒருங்கல் வலய செயற்பாட்டினால் தூண்டப்பட்ட மேற்காவுகை (வெப்பச்சலனம்) செயன்முறை மூலம் கிடைப்பதனால் பரவலான இடி மின்னல் நிகழ்வு களோடு இணைந்த தாகவே இம்மழை கிடைக்கும். எனவே மக்கள் இடிமின்னல் நிகழ்வுகள் தொடர்பில் அவதானமாகவிருப்பது அவசியம் என்றுள்ளது. (ம-66)

# மின்சார சட்டவரைவு விரைவில் அறிமுகம்

கொழும்பு, மார்ச். 5

புதிய மின்சாரத் திருத்தச் சட்டவரைவு விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என்று வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

புதிய மின்சாரத் திருத்தச் சட்டவரைவின்கீழ் இலங்கை மின்சாரசபை பிரிக்கப்படுவது:-

நீக்கப்படும். எங்கள் அரசாங்கம் எந்த மின்நிலையங்களையும் அல்லது மின்சாரப் பரிமாற்றத்தையும்தனியார்மயமாக்காது. முந்தைய அரசாங்கம் இலங்கை மின்சார சபையை எட்டுத் தனித்தனி நிறுவனங்களாகப் பிரிக்கத் திட்டமிட்டது. மின்சாரம் மிகக்குறைந்த விலையில் வாங்கப்படுவதை எமது அரசாங்கம் எப்போதும் உறுதிசெய்யும். முன்பு ஓர் அலகுக்கு 30 ரூபாவாக இருந்த மின்சாரத்தின் விலையை எம்மால் 18 முதல் 19 ரூபா வரை குறைக்க முடிந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# மருத்துவ அதிகாரிகள் சங்க போராட்டம் கைவிடப்பட்டது

கொழும்பு, மார்ச் 5

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தால், நாடளாவிய ரீதியில் இன்று நடத்தத் திட்டமிட்டிருந்த போராட்டம் கைவிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்துக்கும், சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவுக்கும் இடையில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்ற கலந்துரையாடல்களில் காணப்பட்ட இணக்கப்பாடுகளைத் தொடர்ந்தே பணிப்புறக்கணிப்பு கைவிடப்பட்டுள்ளதா அறிவிக்கப்பட்டுள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகளின் ஊதிய உயர்வுக் கோரிக்கைகளை நிறைவேற்ற வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் நளிந்த தெரிவித்த வாக்குறுதிக்கு அமையவே போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

வரவு - செலவுத் திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், இதர நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் தகவல்கள் வெளிவந்துள்ளன. (ம-இ)

## எங்கே தேசபந்து? தேடுதல் தீவிரம்

கொழும்பு, மார்ச். 5

நீதிமன்ற உத்தரவு மற்றும் பயணத்தடை விதிக்கப்பட்ட முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை பொலிஸார் இன்னமும் தேடிவருகின்றனர்.

ஏற்கனவே சுமார் 5 வீடுகளிலும் திடீர்ச்சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. எனினும் அவர் கிடைக்கப்பெறவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

# நிகழ்நிலைச் சட்டத்தில் விரைவில் திருத்தம்

கொழும்பு, மார்ச். 5

2024ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட நிகழ்நிலைப் பாதுகாப்புச் சட்டம், அரசாங்கத்தின் தீர்மானத்துக்குப் பின்னர் விரைவில் திருத்தப்படும் என்று பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார். சட்டத் திருத்தம் தொடர்பில் சுகாதாரம், ஊடகம் மற்றும் நீதி அமைச்சுகளின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளை
வியாழக்கிழமை - மாசி - ௨௨
06.03.2025
சுபநேரம் : 07.55 - 09.25
ராகுகாலம் : 01.55 - 03.25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டாக்காலி மாடுகளால் வவுனியாவில் வீதி விபத்துகள்

வவுனியா, மார்ச் 5
வவுனியா நகரசபைக்குட்பட்ட ஏ-9 வீதிகளில் கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுவதால் வீதி விபத்துகள் நேரிடுகின்றன. இதுதொடர்பில் நகரசபையால் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வவுனியா நகரைச் சூழ பல பாடசாலைகள் மற்றும் அரச அலுவலகங்கள் அதிகம் காணப்படுகின்றன. நாளாந்தம் மக்கள் நடமாட்டம் நிறைந்துள்ள இந்தப் பகுதியில் கட்டாக்காலி மாடுகள் பெரும் நெருக்கடியை ஏற்படுத்துகின்றன.

எனவே வவுனியா நகரசபையானது கால்நடைகள் பராமரிப்பாளர்களுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதுதொடர்பாக வவுனியா நகரசபைச் செயலாளர் பாலகிருபனிடம் கேட்டபோது, தொடர்ச்சியாகக் கட்டாக்காலி மாடுகளைப் பிடிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக வருட ஆரம்பத்தில் நகரில் கட்டாக்காலியாகத் திரிந்த 70 மாடுகள் பிடிக்கப்பட்டதுடன் உரிமையாளர்களுக்குத் தண்டப்பணமும் அறவிடப்பட்டிருந்தது- என்றார். (ச-41-110)

மருத்துவர்களால்

# அரச பணிப்புறக்கணிப்பு தனியாரில் சிகிச்சைகள்

கொழும்பு, மார்ச். 5
மருத்துவர்களின் தொழிற்சங்க நடவடிக்கையின் போது பலதனியார்மருத்துவமனைகளில் அனைத்துச் சிகிச்சைகளும் நடைபெற்றன. இது நீதியான செயற்பாடல்ல என்று மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எவ்வித முன்னறிவித்தலும் இன்றி அரச மருத்துவ அதிகாரிகளும், தாதியர்களும் மேற்கொண்ட தொழிற்சங்க பணிப்புறக்கணிப்புக் காரணமாகச் சத்திரசிகிச்சைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

இதனால் பல மாதங்கள் சத்திரசிகிச்சைக்காகக் காத்திருந்த நோயாளிகளின் நோய்நிலைமை இன்னும் தீவிரமடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அதிதீவிர சிகிச்சைப்பிரிவு அவசர அத்தியாவசிய சேவையுள் வருவதால் அங்கு தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுக்கமுடியாது என்பது குறிப்பிடத்தக்கது. அதேதேவளை தொழிற்சங்க நடவடிக்கையின்போது பல தனியார் மருத்துவமனைகளில் அனைத்து சிகிச்சைகளும் நடைபெற்றன என்றும் மக்கள் சுட்டிக்காட்டினர். (ச-25)



# நெடுந்தீவில் மதுபான நிலையம்; மக்கள் எதிர்த்துப் போர்க்கொடி

யாழ்ப்பாணம், மார்ச்.5
**நெடுந்தீவில் மதுபான விற்பனை நிலையத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் திரண்டு நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

நெடுந்தீவில் இயங்கிவரும் தனியார் விருந்தினர் விடுதி ஒன்று மதுபான அனுமதிப்பத்திரம் மீளப் புதுப்பிப்பதற்கு அனுமதிகோரியநிலையில் அதற்குப் பொதுமக்கள் தமது எதிர்ப்பைத் தொடர்ந்து வெளிப்படுத்தி வந்தனர். அதனையடுத்து அனுமதி வழங்குதலிலுள்ள மக்களின் நிலை தொடர்பில் உரிய திணைக்களத்துக்கு நெடுந்தீவுப் பிரதேச செயலகத்தால் அறிக்கையிடப்பட்டது. அதற்கமைய நேற்றுச்செவ்வாய்க்கிழமை மதுவரித் திணைக்களம் நெடுந்தீவுப் பிரதேச செயலகத்தில் மக்கள் குறைகேள் சந்திப்பை நிகழ்த்தியது. இந்தநிலையில் நெடுந்தீவு மகளிர் அமைப்புகள் நெடுந்தீவுப் பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டு மதுபான அனுமதிப் பத்திர அனுமதி வழங்கப்படக்கூடாது எனத் தெரிவித்துப் போராட்டத்தில் ஈடுபட்டன. (ச-125,66,20-28)



## உதவித்தொகை வழங்கிவைப்பு

யாழ்ப்பாணம், மார்ச். 5
யாழ்.மாநகரசபையின் வரி அறவீட்டு உத்தியோகத்தர்களின் செயற்பாட்டால் வாழ்வாதாரத்தை இழந்த இளைஞனுக்கு ஒரு இலட்சம் ரூபா உதவித்தொகை வழங்கிவைக்கப்பட்டுள்ளது. லஷ்மிகா அறக்கட்டளையின் நிறுவுநர் தர்மிகா, வடமராட்சி கிழக்கு சமூக மாற்றத்துக்கான ஊடகமையம் ஊடாக இந்த உதவித் தொகையை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வழங்கிவைத்தார். (ச-25,27)






# சுற்றுலா முதலீடு யாழில் ஆராய்வு

யாழ்ப்பாணம், மார்ச். 5
சுற்றுலா முதலீடு தொடர்பான கலந்துரையாடல் யாழ்.மாவட்டச் செயலர் ம.பிரதீபன் தலைமையில் மாவட்டச்செயலர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.

இதன்போது, இந்திய முதலீட்டாளர்கள் இந்தியாவுடன் இணைந்த வகையில் யாழ்ப்பாணம், மன்னார்ப் பகுதிகளில் ஆன்மீகம் மற்றும் சுற்றுலாத் துறைகளில் முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பான சாத்தியப்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. கலந்துரையாடலில் இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகார சபையின் முதலீட்டுப் பிரிவின் பணிப்பாளர், வட மாகாணச் சுற்றுலாத்துறைப் பணியகத் தலைவர், யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்ட மேலதிக செயலர்கள், உதவி மாவட்டச் செயலர், இந்திய முதலீட்டாளர் குழு, காணி ஆணையாளர் அலுவலகப் பிரதிநிதி, மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் காணி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-25,66)


யாழ்.சிறையிலுள்ள

# இந்திய மீனவர்களுடன் சிறீதரன் எம்.பி. சந்திப்பு

யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலுள்ள இந்திய மீனவர்களை நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நேரில் சந்தித்துக் கலந்துரையாடினார். இலங்கைச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை விடுவிக்கக்கோரி இந்தியாவின் இராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் தொடர் போராட்டம் நடத்திவருகின்றனர்.

அதேவேளை இந்திய மீனவர்களின் வருகையைக் கட்டுப்படுத்துமாறு உள்ளூர் மீனவர்களும் கோரிக்கை விடுத்துவரும் நிலையில் சிறீதரன் எம்.பி. இந்திய மீனவர்களை சிறையில் சென்று சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது எமது குடும்பத்தினருடன் தொலைபேசியில் உரையாடுவதற்கான அனுமதியை வழங்குவதற்கு உதவுமாறும், சிறைச்சாலையில் இருந்தாலும் வெளியுலக நடப்புகளை அறிந்துகொள்ள செய்திகளைப் பார்வையிட சிறைக்கூடத்தில் ஒரு தொலைக்காட்சி வசதியை ஏற்படுத்தித்தருமாறும் இந்திய மீனவர்கள் தரப்பில் கோரப்பட்டது. (ச-125, 113)



# ஆனையிறவு உப்பளத்துக்கு இளங்குமரன் எம்.பி. விஜயம்

கிளிநொச்சி, மார்ச் 5
ஆனையிறவு உப்பு உற்பத்தி நிலையத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சென்று பார்வையிட்டார். இந்தக் களவிஜயத்தில் கிளிநொச்சி மாவட்டச்செயலரும் கண்டாவளைப் பிரதேச செயலாளர் உள்ளிட்டோரும் கலந்துகொண்டனர். (ச-25,113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேசரீதியிலான ஒருங்கிணைப்புக் கூட்டங்கள் இந்தமாத இறுதியில் நடக்கும்!

யாழ்ப்பாணம், மார்ச். 5

**இந்தமாத இறுதியில் யாழ்.மாவட்டப் பிரதேச செயலகங்களுக்கான பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களை நடத்தவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி தெரிவித்தார்.**

இணையவழியில் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது, பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்கள் தொடர்பிலான கோரிக்கையை அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி முன்வைத்ததுடன், கூட்ட நேரத்தினையும் அறிக்கையிட்டார். அதன் பிரகாரம், அனைவரது நேரத்தினையும் கருத்திற்கொண்டு மார்ச் 24,25,26 ஆம் திகதிகளில் குழுக்கூட்டங்களை நடத்தலாம் என நாடாளுமன்ற உறுப்பினர்களால் முன்மொழியப்பட்டது.

இந்நிலையில் மாவட்டச் செயலர் ம. பிரதீபன் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், அருகிலுள்ள பிரதேச செயலகங்களையும் இணைத்து ஒரேநாளில் இரண்டு அல்லது மூன்று பிரதேச செயலகங்களுக்கான கூட்டத்தினை நடத்த முடியும்.

குறித்த திகதிகளில் எந்தப் பிரதேச செயலகங்களுக்குக் கூட்டம் என அறிக்கையிட்டு, பிரதேச செயலர்களுக்கூடாக அதனை மேற்கொள்வோம் என்றார். (அ. 25, 125)



# இயலாமையை மறைக்க பழிசுமத்தும் அரசாங்கம்!

## காஞ்சன விஜயசேகர கண்டனம்

கொழும்பு,மார்ச் 5

நீதிமன்றத்தின் தீர்மானத்தைக் கடந்த அரசாங்கம் செயற்படுத்தவில்லை என்று இந்த அரசாங்கம் தெரிவிப்பது தவறு. தமது இயலாமையை மறைத்துக்கொள்ள பிறர்மீது பழிசுமத்துவதை அரசாங்கம் தவிர்த்துக்கொள்ளவேண்டும் என முன்னாள் மின் சக்தி மற்றும் சக்திவலு அமைச்சர் காஞ்சன விஜேசேகர கண்டனம் தெரிவித்துள்ளார். எரிபொருள் விநியோகத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை குறித்து தனது உத்தியோகபூர்வ எக்ஸ் வலைத்தளத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது-

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தீர்வை வரிச் சூத்திரத்தை அமுல்படுத்துவதைத் தடுக்கும் வகையில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை உயர்நீதிமன்றம் 2024 ஒகஸ்ட் மாதம் இரத்துச்செய்தது. நீதிமன்றத்தின் தீர்மானத்தைச் செயற்படுத்த சட்டமா அதிபரின் ஆலோசனைகளைக் கோரினோம். நீதிமன்றத்தின் தீர்மானத்தைச் செயற்படுத்த உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தோம். இப்போது . எரிபொருள் விநியோகஸ்தர்களுக்கும், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கும் இடையிலான முரண்பாடு தொடர்பில் அரசாங்கம் தெரிவிக்கும் கருத்துக்கள் நாட்டு மக்களை தவறாக வழி நடத்தும்- என்றார். (அ-33)

## ரூபா உயர்வு

கடந்தவாரத்துடன் ஒப்பிடுகையில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்று அதிகரித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 291 ரூபா 5 சதம் என்றும், விற்பனைப் பெறுமதி 299 ரூபா 61 சதம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# எரிபொருள் நிரப்பு நிலையங்களை வெளிநாடுகளுக்கு வழங்க முயற்சி

## பெற்றோலிய விநியோகஸ்தர் சங்கம் குற்றச்சாட்டு

இலங்கைப்பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான எரிபொருள் நிரப்புநிலையங்களை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு மாற்ற அரசாங்கம் முயற்சிக்கின்றது என்று பெற்றோலிய விநியோகஸ்தர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது. இதுதொடர்பில் அந்தச் சங்கத்தின் உபதலைவர் குசும் சதநாயகே தெரிவித்துள்ளதாவது-

இதற்காக அரசாங்கம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. எரிபொருள் நிரப்புநிலைய உரிமையாளர்களின் 3 சதவீதக் கழிவுக் கொடுப்பனவுக் குறைப்புத் தொடர்பாக ஜனாதிபதி செயலகத்தில் மனு ஒன்றைக் கையளிக்கவுள்ளோம்- என்றார். (எ-இ)

வேலைவாய்ப்புப் பணியகத்தால்

# வெளிநாட்டுக்கு 6, 290 பெண்கள் சட்டவிரோதமாக அனுப்பிவைப்பு

## கண்டுபிடித்தது கோப் குழு

கொழும்பு,மார்ச் 5

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் சட்டவிரோதமான முறையில், ஒப்பந்தங்கள் எதுவுமின்றிப் பயணவிசா மூலம் பணிப்பெண்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதை கோப் குழு கண்டுபிடித்துள்ளது.

இது தொடர்பாக கோப் குழு மேலும் தெரிவிக்கையில், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பணிபுரியும் உயரதிகாரிகளின் அனுசரணையுடனே இந்த நடவடிக்கைகள் இடம்பெற்றுவருகின்றன. 6, 290 பேர் இவ்வாறு சட்டவிரோதமான முறையில் அனுப்பப்பட்டுள்ளனர்.

இவர்களில் 365 பேர் 45 நாள்களில் நாடு திரும்பியுள்ளனர். சில பெண்கள் துஷ்பிரயோகத்துக்கு ஆளாவதற்கு வாய்ப்புகள் உள்ளன. இதேவேளை 45 நாள் வேலை ஒப்பந்தத்துடன் தென்கொரியாவுக்கு வேலைவாய்ப்புகளுக்குத் தொழிலாளர்கள் அனுப்பப்படுகின்றனர்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பணிபுரியும் உயரதிகாரிகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களின் நலனிலேயே அக்கறையாக உள்ளனர். அவர்கள் தொழிலாளர்களின் நலனில் அக்கறை செலுத்துவதில்லை என்று தெரிவித்துள்ளது. (அ-33-6)



# மகாஜன சம்பியன்!

யாழ்ப்பாணம்,மார்ச் 5

ஐக்கிய இராச்சியத் தமிழ்ப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தால் 16 வயதுப் பெண்களுக்கிடையில் நடத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியில் மகாஜனக் கல்லூரி அணி சம்பியனானது.

குறித்த தொடரின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணியை எதிர்த்துத் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி மோதியது.

முதல் பாதியாட்டத்தில் இரு அணிகளும் பல நிமிடங்கள் சமபலத்துடன் மோதியபோதிலும் மகாஜனக் கல்லூரியின் வீராங்கனை கல்ஷிகா இரு கோல்களைப் பதிவுசெய்ய முதல் பாதியாட்டத்தில் மகாஜனக் கல்லூரி 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதியாட்டத்திலும் மகாஜனக் கல்லூரி அணியின் ஆதிக்கம் மேலோங்கிய போதிலும் யூனியன் கல்லூரி அணியினர் மிகச்சிறப்பாக ஈடுகொடுத்து விளையாடினர்.

இருப்பினும் மகாஜனக் கல்லூரி வீராங்கனை கல்ஷிகா மீண்டும் இரு கோல்களைப் பதிவுசெய்ய ஆட்டநேர முடிவில் மகாஜனக் கல்லூரி அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக்கொண்டது. (அ-33-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 5 நாடுகளின் தேரர்கள் கிளிநொச்சி வருகை!

உலக சுதந்திரம் வேண்டி அம்பாந்தோட்டை திஸ்ஸமகாராம முதல் நயினாதீவு நாகதீபம் வரை இலங்கை உட்பட ஐந்து நாடுகளின் தேரர்கள் முன்னெடுத்துள்ள பாதயாத்திரை நேற்றுமுன்தினம் கிளிநொச்சியை வந்தடைந்தது. கிளிநொச்சியை வந்தடைந்த தேரர்களை யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக மாணவர்கள் வரவேற்றனர்.

தாய்லாந்து, மியன்மார், இலங்கை, லாகோஸ், இந்தியா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த 50 தேரர்கள் குறித்த பாத யாத்திரையில் கலந்துகொண்டனர். (ச-25,28-11)

## கைது

வவு., மார்ச் 6 வவுனியாவில் மாணவர்களுக்கு விற்பனை செய்வதற்காக வைத்திருந்த பெருமளவு போதை மாத்திரைகளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போதே இந்தப் போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-110)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**
**வைத்திய கலாநிதி நடராஜா சிவராஜா நினைவுப்பேருரை - 2025**

பேருரைத் தலைப்பு :
"இலங்கையில் மகப்பேற்று மரணங்களும் முக்கியமாக தீர்மானிக்கும் காரணிகளும், கண்ணியமான கவனிப்பும்"
(Respectful care, the super determinants and Sri Lanka's maternal deaths)

பேருரை வழங்குநர் :
**பேராசிரியர் எச்.எம்.சேனாநாயக்க,**
**பெண் நோயியல் மற்றும் மகப்பேற்றுத் துறை,**
**மருத்துவ பீடம்,**
**கொழும்புப் பல்கலைக்கழகம்.**

திகதி : 06.03.2025 (வியாழக்கிழமை)
பி.ப 3.00 மணி

நிகழ்விடம் : ஹுவர் கலையரங்கம்,
மருத்துவ பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

(CR/44484) J-1

**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்**
**விலைமனுக் கோரல்**

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் நயினாதீவு வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவு கட்டடத்தை அமைத்து வருகின்றது. அதன்படி முன்மொழியப்பட்ட பின்வரும் பொருட்களை கொள்வனவு செய்ய யாழ்ப்பாணத்தில் தகுதி வாய்ந்த விநியோகத்தர்களிடம் விலைமனுக்கோருகின்றது.

- **மாபிள் வேலை**
- **நீர்க்குழாய் பொருத்துதல் வேலை**
- **மின்சார பொருட்கள்**

விலை மனுப்பத்திரங்கள் மற்றும் மேலதிக விபரங்களை இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளை மற்றும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலைதளமான www.redcross.lk இல் 05 மார்ச் 2025 இலிருந்து 19 மார்ச் 2025 காலை 10.00மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

**ஏனைய விபரங்களுக்கு:**
**கிளை நிறைவேற்று உத்தியோகத்தர்,**
**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ் கிளை,**
**இல.468, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**
**தொடர்பு இல.0212222561 / 0766675526**

விலை மனுக்களை கடித உறையில் பொதியிட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் (SLRCS/PRO/2025/006) என்ற குறிப்பு இலக்கத்தை குறிப்பிட்டு, கீழ்க்காணும் முகவரியிட்டு 19 மார்ச் 2025 காலை 10.30மணிக்கு முன்னர் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையில் கையளிக்கவும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்.**
**இல.106,**
**தர்மபால மாவத்தை,**
**கொழும்பு 07.**

(CR/44487) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 09 . 1940



மறைவு 04 . 03 . 2025

**திருமதி சிவலிங்கம் நாகேஸ்வரி**

வேலணை வடக்கு மணியகாரர் வீட்டடியை பிறப்பிடமாகவும் இல 49 பிரப்பங்குளம் வீதி (பன்றிக் கோட்டு பிள்ளையார் கோவிலடி) வண்ணார் பண்ணையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவலிங்கம் நாகேஸ்வரி நேற்று (04.03.2025) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-பொன்னம்மா தம்பதியின் அன்பு மகளும் கட்டுவனைச்சேர்ந்த காலஞ்சென்றவர்களான இளையதம்பி- செல்லம்மா தம்பதியின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிவலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் ஐங்கரன் சுதாகரன் சுதர்சினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் கிருபாநந்தினி அவர்களின் அன்பு மாமியாரும் கியானிக்காவின் அன்பு பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான யோகம்மா (ஓய்வுநிலை ஆசிரியை), செல்லம்மா மற்றும் மனோன்மணி, அருமைநாயகம் (ஓய்வு நிலை கோட்டக்கல்விப்பணிப்பாளர்), புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான குமாரரத்தினம் (ஓய்வு நிலை ஆசிரியர்), கதிரவேல் மற்றும் குமாரவேல், ரேவதி மகேந்திரராசா தவமணி திரவியம் காலஞ்சென்ற அற்புதம் மற்றும் சிவராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை வியாழக்கிழமை (06.03.2025) முற்பகல் 10.00 மணியளவில் அவரது தற்காலிக இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**49. பிரப்பங்குளம் வீதி,**
**வண்ணார் பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**சுதாகரன் (மகன்)**
**077 315 1593**

(CS 2665) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதன் பொய்கை

வெற்றிபெற கற்றுக்கொள்ள வேண்டுமானால், நீங்கள் முதலில் தோல்வியடைய கற்றுக்கொள்ள வேண்டும்.

- மைக்கேல் ஜோர்டன்



# தீராத் தலைவலியாக வெள்ளை ஈ

## கட்டுப்படுத்த நுட்பம் என்ன?

ஈஸ்வரன் சற்குணன்
தென்னை பயிர்ச்செய்கை சபை
பிராந்திய முகாமையாளர் (பதில்)
யாழ்ப்பாணம்

வெள்ளை ஈ தற்போது வடபகுதியில் முன்னைய காலங்களிலும் பார்க்க மிகவேகமாகப் பரவிவருகின்றது. இந்தப் பீடையானது இந்தியாவில் 2016ஆம் ஆண்டளவில் கண்டறியப்பட்டாலும் இலங்கையைப் பொறுத்தவரையில் இதன் தாக்கமானது 2022ஆம் ஆண்டளவிலே பெரிதும் உணரப்பட்டது. இது பிரதானமாக மஞ்சள் நிறத்தினையுடைய தாவரங்களில் அதிகம் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. செவ்விளநீர் மரங்கள், குரோட்டன் போன்றன இதற்கு உதாரணங்களாகும். இதன் பிரதான விருந்து வழங்கித் தாவரங்களாக வாழை, பப்பாசி, தேசி, தோடை, கொய்யா போன்ற மரங்களைக் குறிப்பிடலாம்.

தென்னையைப் பொறுத்தவரையில் ஓலையின் தோற்றவியலானது இவை தங்கியிருந்து பெருகுவதற்குரிய சிறந்த ஆதாரமாக விளங்குவதனாலும் வெள்ளை ஈ உறிஞ்சக் கூடியளவிற்கு சாறு அதிகம் காணப்படுவதாலும் வெள்ளை ஈயினது பறப்புயரத்திற்குள் தென்னையின் உச்சிப் பகுதி வருவதாலும் ஏனைய பயிர்களினைவிட தென்னையில் இதன் தாக்கமானது அதிகம் உணரப்படுகின்றது.

### கடும் வெயிலின்போது 200 மடங்குப் பரவுகை

சூழல் வெப்பநிலையானது அதிகரிக்கும்போது வெள்ளை ஈக்களின் பெருக்கமும் பரவலும் சடுதியாக அதிகரிக்கும். வெள்ளை ஈக்களின் தாக்கத்தினை அவதானிக்கையில் மழைக்காலத்தில் இவற்றின் தாக்கம் மிக மிகக் குறைவாகவும் கடும் வெயில் காலத்தில் தாக்கம் மிகமிக அதிகமாகவும் இருக்கின்றது. கடும் வெயில் காலத்தில் சில சமயங்களில் 200 மடங்கு பெருகும் தன்மையும் காணப்படுகின்றது.

தென்னைகளில் இதன் பரவலினை அவதானிக்கும் போது கீழே சுற்று ஓலைகளிலிருந்து குருத்துப் பகுதியினை நோக்கி இதன் பரவலானது குறைந்துகொண்டு செல்லும். அதாவது அடிப்புற ஓலைகளிலே அதன் முட்டைகள், குடம்பிகள், சிலந்தி வலை போன்ற வெள்ளை நிற வளையம், வளையமான கூடுகள் அவதானிக்கப்படுகின்றன. வெள்ளை ஈ ஓலைகளின் அடிப்பகுதியில் இருந்து சாற்றினை உறிஞ்சிக் குடிப்பது மட்டுமல்லாமல் தேன் போன்ற ஒட்டும் தன்மையான கழிவினையும் வெளிவிடுகின்றது. இது அடுத்த வரிசை ஓலைகளின் மேற்பரப்பில் விழுவதாலும் அதில் பங்கஸ் தொற்று ஏற்படுவதனால் கறுப்பு நிறமாக மாற்றமடையும்.

வெள்ளை ஈயின் தாக்கம் ஏற்பட்ட ஓலைகளின் மேற்பரப்பில் கழிவு ஓயில் ஊற்றியது போன்று கறுப்பு நிறமாக மாற்றமடைந்திருக்கும். ஓலைகளின் கீழ்ப் புறத்தில் சிலந்தி வலை போன்று வளையம் வளையமாக வெள்ளை நிறத்தில் கூடுகள் தென்படும். இவ் வளையப்பகுதியினை மிகவும் உன்னிப்பாக அவதானிக்கும் இடத்து வெள்ளை ஈயின் முட்டைகள், குடம்பிகள் போன்றவற்றினை அவதானிக்கமுடியும். இலங்கையில் இந்தப் பூச்சியின் தாக்கம் வரமுன்னரே பல வருடங்களுக்கு முன்பாகவே இந்தியாவில் இத்தாக்கம் ஏற்பட்டதால் அவர்களுடைய ஆய்வு அறிக்கைகளின் பிரகாரம் வெள்ளை ஈ தென்னையில் இறப்பினை ஏற்படுத்தாது என்பதனையும் பொருளாதாரப் பாதிப்பினை ஏற்படுத்தும் என்பதனையும் அறியமுடிகின்றது. கழிவு ஓயில் போன்ற படிவானது ஓலைகளின் மேற்பரப்பில் படிவதனால் உணவுத் தொகுப்பானது பெரிதும் பாதிக்கப்படுகின்றது. ஒளித் தொகுப்பு பாதிக்கப்படுவதனால் உணவுத் தொகுப்பு பாதிக்கப்பட உணவு ஒதுக்கமானது குறைக்கப்படுகின்றது. உடனடி விளைவாக பாளைகள் உருவாக்கப்படல், குரும்பைகள் விருத்தியடைதல் போன்றவற்றுக்கான உரிய போசணைப் பதார்த்தங்கள் கிடைக்கப் பெறாமையினால் குரும்பைகள், இளம் தேங்காய்கள் முதிர்ச்சியடைய முன்னரே கொட்டுப்படும் சாத்தியத் தன்மைகள் அதிகம் அவதானிக்கப்படுகின்றன. அத்துடன் நீண்டகாலப் போக்கில் தென்னையின் உற்பத்தியையும் அதாவது தேங்காய் உருவாவதனையும் குறைக்கும் சாத்தியத் தன்மை காணப்படுகின்றது.

## ஒரு நிபுணத்துவப் பார்வை!

### இதனை எவ்வாறு கட்டுப்படுத்துவது?

மனிதர்கள் போசாக்குள்ள உணவுகளினை உள்ளெடுக்கும் போது அவர்களுக்கு எவ்வாறு நோய் எதிர்ப்புத் தன்மை உருவாகின்றதோ அவ்வாறே தென்னைகளுக்கும் சரியான பசளைப் பிரயோகம், நீர்ப்பாசனம் போன்றவற்றினைச் செய்யும்போது உரிய போசணைச் சத்துக்கள் கிடைக்கப்பெறுகின்றமையால் தென்னைகளுக்கு நோய் எதிர்ப்புத் தன்மை அதிகரித்து வெள்ளை ஈ தாக்கத்தின் அளவினைக் குறைக்கக் கூடியதாக இருக்கும்.

தண்ணீரை ஓலையின் கீழ்ப் புறமாகவும் மேற்புறமாகவும் ஒன்றுவிட்ட ஒரு நாளைக்கு விசிறியடிப்பதன் மூலம் இவற்றின் பெருக்கத்தினைக் குறைக்கலாம். 10 லீற்றர் தண்ணீருக்கு 100 மில்லிலீற்றர் வேப்பெண்ணெயை, 50 கிராம் சவர்க்காரத் தூளும் சேர்த்து இரண்டு கிழமைக்கு ஒரு தடவை விசுறுவதன் மூலமும் இவற்றின் பெருக்கத்தினைக் குறைக்கலாம். வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்துவதற்கு இரசாயனங்களினைப் பாவித்தலைக் குறைப்பது சாலச்சிறந்தது. ஏனெனில் ஓலைகளின் கீழ்புறம் வெள்ளை ஈக்களை இயற்கையாகவே கட்டுப்படுத்தக்கூடிய பூச்சி இனங்கள் காணப்படுகின்றன. இரசாயனங்களை விசிறும்போது இவையும் அதிகளவில் அழிக்கப்படுகின்றன. அத்துடன் இவற்றின் பெருக்கவீதமும் மிகவும் குறைவாக இருப்பதனால் இவற்றின் மீளுருவாக்கம் பெரிதும் பாதிக்கப்படுகின்றது. மற்றும் மகரந்தச் சேர்க்கைக்குரிய தேனீக்களும் இரசாயனங்களின் பாவனையால் அழிக்கப்படுகின்றன. சாதாரணமாக வயல்களிற்கு இரசாயனங்கள் விசிறும்போது கிடையாக கீழ் நோக்கியே விசிறப்படுகின்றன. ஆனால் வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்துவதற்கு உயரமான தென்னைகளிற்கு இரசாயனங்களினை மேல் நோக்கி விசிறுவதனால் அவை சூழலிற்கு பரவும் அளவு அதிகமாக இருப்பதனால் திறந்த கிணறுகள், நீர்நிலைகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. தென்னை ஓலைகளின் மேற்புறமாக பாதிப்பு அதிகமாகக் காணப்பட்டு கறுப்பு நிறம் முற்றுமுழுதாகக் காணப்படின் அவ் ஓலைகளினை அகற்றிய பின்னர் மற்றைய ஓலைகளிற்கு தண்ணீரை அல்லது வேப்பெண்ணெய்க் கரைசலினை விசிறலாம். தென்னை மரங்களிலிருந்து முற்று முழுதாக ஓலைகளினை வெட்டுதல் கூடாது. அவ்வாறு முற்று முழுதாக ஓலைகள் அகற்றப்படின் மரம் இறக்கும் சந்தர்ப்பம் அதிகமாகும். ஓலைகளினை அகற்றும் போது வெட்டிய ஓலைகளின் எஞ்சிய பாகங்களிற்கு கட்டாயம் கழிவு ஓயில் பூசுதல் வேண்டும் அல்லாவிடின் அவ் மரங்கள் செவ்வண்டுத் தாக்கத்திற்குள்ளாகி இறக்கும் சூழ்நிலை ஏற்படும்.

பொதுவாக மஞ்சள் நிறம் பீடைகளினைக் கவருவதால் மஞ்கள் பொலித்தீனில் கிறீஸ் அல்லது வசலின் தடவி தென்னை மரங்களின் அடிப்பகுதிக்கு அல்லது உச்சிப்பகுதிக்கு சுற்றிக்கட்டுவதனாலும் இதன் பெருக்கத்தைக் குறைக்கலாம். வெள்ளை ஈ தொடர்பான ஆலோசனைகளையோ அல்லது மருந்துகளை விசிறக்கூடிய கருவிகளை கிரமமான முறையில் பெறுவதற்கோ கமநலசேவை நிலையங்களிலுள்ள தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களினையோ அல்லது யாழ்ப்பாண பிராந்திய காரியாலயம், பளையிலுள்ள (தொலைபேசி இல: 0212284501) பிராந்திய காரியாலயத்தையோ தொடர்புகொள்ளமுடியும். ஒவ்வொரு கிராமங்களிலுமுள்ள இளைஞர் யுவதிகள் மற்றும் சமூகமட்ட அமைப்புக்கள் வெள்ளை ஈயினைக் கட்டுப்படுத்துவதற்கு முன்வரவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்த்தமுள்ள வாழ்வுக்கு அடித்தளமிடுவோம்



■ எஸ் யேசுதாஸ், கொழும்புத்துறை

அனைத்துலக கத்தோலிக்க திருஅவையானது இன்று தொடங்கும் திருநீற்றுப்புதன் வழிபாடுகளுடன் தவக்காலத்தில் காலடிபதிக்கின்றது. இது புனிதகாலம். இது மண்ணிய வாழ்வில் புண்ணியம் சேர்க்கும் அருளின் காலம். புண்ணாகிப்போன எம் மனங்களையும் தீய குணங்களையும் புடமிடும் காலம். எம்மில் ஆழ்ந்து, எம்மை ஆய்ந்து, அடுத்தகட்ட வாழ்வுக்குள் நுழையச் சொல்லும் மனமாற்றத்தின் காலம். விசேடவிதமாக கிறிஸ்து பிறப்பின் 2025ஆம் ஆண்டு நிறைவு யூபிலி ஆண்டில் முன்னெடுக்கும் தவக்காலம், எம்மை ஆன்மிக புதுப்பித்தலுக்கு அழைப்பு விடுக்கின்றது.


கடந்த காலங்களின் கறையை அகற்றி புதுவாழ்விற்குள் கடந்து சென்று, எதிர்கால வாழ்வை இறையாசீர்களால் நிரப்பி உருமாற்றம்பெற்று பயணிக்க அழைக்கப்படுகின்றோம். லேவியச் சட்டங்களில் உள்ள யூபிலி தொடர்பான விதிமுறைகளின் படி யூபிலி ஆண்டு அடிமைகளை மட்டுமல்ல, இழந்த நிலங்களை மிட்டெடுக்கவும், விடுவிக்கவும் வாய்ப்பளித்தது. அதேபோல் யூபிலி ஆண்டில் பாவத்தின் அடிமைத்தனங்களில் இருந்து விடுபடவும், தூய்மையில் முன்னேறி ஆன்மீக ஊட்டத்தினைப் பெறவும் சிறப்பான உந்துதலைப்பெற வாய்ப்பளிக்கின்றது. முதன்முதலில் கத்தோலிக்கத் திருஅவையின் 1300ஆம் ஆண்டில் திருத்தந்தை 6ஆம் கிளெமென்ட் 1350ஆம் ஆண்டின் 50 ஆண்டுகளுக்கு ஒருமுறை யூபிலி ஆண்டைக்கொண்டாடும் முகமாக புதியவழியை முன்னேடுத்தார். சில யூபிலி ஆண்டுகளுக்குப் பின்னர் திருத்தந்தை 2ஆம் பவுல் அவர்கள் 25ஆண்டுகளுக்கு ஒருமுறை யூபிலி ஆண்டாக பிரகடனப்படுத்தினார். 2025ஆம் ஆண்டை 'நம்பிக்கையின் திருப்பணிகளாவோம்' என்னும் கருப்பொருளிலும் யூபிலி ஆண்டாக தொடருமாறு திருத்தந்தை பிரான்ஸ் பிரகடனப்படுத்தினார்.

உரோமாபுரியிலுள்ள புனித பேதுரு பசிலிக்காவில் உள்ள தூயகதவைத் திறந்து அதனூடாகப் பயணித்து யூபிலி ஆண்டை ஆரம்பித்துவைத்தார். இக்கதவானது யூபிலி ஆண்டில் மட்டும் திறக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. இதனூடாக நுழைவோர் பாவங்களில் இருந்து மன்னிப்புப் பெற்று பரிபூரண பலன்களைப்பெறுவார் என திருஅவை அறிவித்துள்ளது. அங்கு செல்லமுடியாதோர் தத்தமது நாடுகளில் உள்ள புனித யாத்திரைத் தலங்களுக்கு பயணித்து பக்திமுயற்சிகள், சிறப்பு ஆராதனைகள், ஒப்புரவு அருட்சாதனம் என்பவற்றில் தூயமனதோடு ஈடுபட்டு நற்பலன்களைப் பெறலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. நாம் புதுவாழ்வுக்குள் நுழைய வேண்டுமானால் எம்மில் உள்ள பாவக்கறைகளை அகற்றவேண்டும். கடந்தகாலவாழ்வைப்பற்றி சுயஆய்வு செய்து பாவ மன்னிப்பின் அருட்சாதனங்களைப்பெற்று தீயகுணங்களில் இருந்து விடுபடவேண்டும். அப்போது இறையாசீர் நிறைவாக எம்மீது பொழியப்படும். தவக்காலம் என்பது வெறுமனே சடங்குகள் அனுஸ்டானங்கள் வெளிப்புற அடையாளங்களோடு முடிந்து விடுவதல்ல. மாறாக மறைவாக இருக்கும் எமது இதயத்தை திறந்து அங்கே குவிந்திருக்கும் இறைவனையும் அயலாலையும் மாசுபடுத்தும் குப்பைகளை எரிப்பதாகும். 'தூய இலங்கையை' விட, 'தூய இதயம்' செயற்பாட்டை தவக்காலத்தில் ஆரம்பிப்போம். ஆனால் அது வெளிவேடத்தனமாக அமைந்துவிடக்கூடாது. 'நீங்கள் இறைவேண்டல் செய்யும்போதோ, தர்மம் புரியும் போதோ வெளிவேடக்காரர்கள் போல் மக்கள் பார்க்கவேண்டுமென்று செய்யாதீர்கள். அப்போது அதற்குரிய கைமாறைப் பெற்று விடுவீர்கள். இறைவனிடம் வேண்டும்போது தனிமையில் மறைவாக வேண்டுங்கள். தர்மம் என்பது வலது கை செய்வது இடது கைக்குத் தெரியாதிருக்கட்டும். நோன்பு இருக்கும்போது முகவாட்டம் இன்றி இருங்கள். அப்போது மறைவாய் உள்ளத்தைக்காணும் இறைவன் உங்களுக்கு ஏற்றகைமாறு அளிப்பார்' என்கிறார் இயேசு. யூபிலி ஆண்டின் தவக்காலத்தில் நம் வாழ்வைச் செதுக்கவும், சீராக்கவும், பண்படுத்தவும், வர்ணந்தீட்டவும் கடவுள் மூன்று விதமான தூரிகைகளைத் தந்துள்ளார்.

1. தானம் தானம் என்பது பணம்பொருள் மட்டுமல்ல. புன்னகை தானம், நல்வார்த்தைகள் தானம், நேரதானம், உதிரதானம், வழிகாட்டல்தானம், உடனிருப்பு தானம், உரிமைத்தானம், சமத்துவதானம் எனப் பலவுண்டு
2. இறைவேண்டல் கடவுளோடு உரையாடுவது போல் மனிதரோடும், மனிதரோடு உறவாடுவது போல் இயற்கையோடும் உறவாடி இறைவேண்டலை இனிதாக்கலாம்
3. தவம் உணவு ஒறுப்பு தவம் மட்டுமல்ல, வார்த்தைத்தவம், வெளிவேடத்தவத்தை விட உள்ளத்தால், உணர்வால், பார்வையால், நல்எண்ணங்களால் புரியும் தவம் திருத்தலத்தைப் பயணங்களோடு பிறர்பணிவிடைப் பயணங்கள் என தவத்திற்கு சிறப்புச் சேர்க்கலாம்.

'மனந்திறந்தி நற்செய்தியை நம்புங்கள்' என்ற உச்சாரணத்தோடு நெற்றியில் திருநீற்றுச் சிலுவை வரையப்பெற்ற நாம் தீயிலே புடமிட்டுப்பெற்ற திருநீற்றைப்போல் எம்மை உருமாற்றி பிறரை உருவாக்குவோம். நாம் வாழத் தன்னையே உயிர்க்கொடையால் ஈந்த யேசுவின் பாதையில் பயணித்து இந்த யூபிலி ஆண்டினிலே அர்த்தமுள்ள வாழ்வுக்கு அடித்தளமிடுவோம். ■

# கனவின் தழும்பு



பவித் அருள்வசந்.

என்னை அடையாளம் தெரியாத என்னுடைய தேசம்
எனக்கு மிகவும் பழக்கப்பட்ட மொழி ஆனால் என் தாய்மொழி அல்ல.
எனக்கு மிகவும் பழக்கப்பட்ட பண்பாடு ஆனால் என்பரம்பரையால் வந்த தல்ல
அவர்களுடன் இணைந்து தான் வாழ்கிறேன் நான் வேறு இனமும் அல்ல.
ஒரேநாடு, ஒரேதேசம், ஒரேமொழி, ஒரே இனம் என்று
அச்சிடப்பட்ட தாள்களில் உள்ளதே அதே போன்றொரு நாடு
மாசி நான்காம் திகதி நம் நாட்டின் சுதந்திரதினம்
நாட்டின் எந்த மூலைகளிலும் இன்னல்கள் இல்லை - இன்னமும்
சொல்லப்போனால் ஒருவரோடு ஒருவர் முன்பகையும் இல்லை

இப்படி ஒரு வாழ்கை வாழ யாருக்குத்தான் ஆசை இல்லை
இதுதானே உலக நாடுகளிடம் நம் நாட்டைப் பற்றிய அபிப்பிராயம் ஆனால்
எமக்கு மட்டும் ஏன்? எற்காக? இப்படி? என்று விதியை நோகுகிறோம்
கண்ணீரால் கன்னங்கள் கரைந்தகதையும்,
என்பிள்ளையைக் காணவில்லை எனும் தாயின் கதறலும்
கவிஞனை கண்ணீரோடு தான் எழுதுகோலை சுமக்க வைக்கும்
ஒரேநாடு என்கிறார்கள் ஆனால் தேசிய மொழியில் எம்மொழி இல்லை
ஒரேதேசம் என்கிறார்கள் ஆனால் இறந்தவர்களை
நினைவுகூரும் உரிமை எமக்கு இல்லை.
ஆனையிறவு, கிளிநொச்சி, முல்லைத்தீவிலும் முடிந்துபோன யுத்தத்தின்
வெற்றிச் சின்னங்கள் எதற்காக...? நாம் உங்கள்
சிறுபான்மை அடிம்மகள் என்று எங்களுக்குத் தெரிவிப்பற்காகவா?

அல்லது தம் இன்னுயிரை ஒளியாக்கி வெளிச்சம் தர காத்திருக்கும் நம்
மறவர்களை மண்ணில் விதைத்தோமே அற்காகவா?


ஒருகாயத்தை மீண்டும் மீண்டும் கிளறுவதால் அது ஆறிப்போகுமா...?
இன்னமும் குருதிகொதித்துக்கொண்டுதான் இருக்கிறது.
"அப ஸ்ரீலங்கா" எனும் தேசிய கீதம் " நம் ஸ்ரீலங்கா" என மாற வேண்டும்
என்று.
கனவின் தழும்பு ஆறாமல் பேராறு ஆகிறது.
எம் கனவுகள் சாய்ந்த கண்ணீரில் உருவானதே
இந்த சுதந்திர இலங்கை....
இன்னும் ஒருநாள் புதிய கனவுகளைத் தேடும் என்தூ(து)க்கம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 'வனமெல்லாம் புதிர்'

## நூல் அறிமுகம் கிளிநொச்சியில்









2024ஆம் ஆண்டு சிறந்த அறிவியல் புனைகதைக்கான சாஹித்திய மண்டலப் பரிசு பெற்ற, ஜனகா நீக்கிலாஸ் எழுதிய 'வனமெல்லாம் புதிர்' நூலின் அறிமுக நிகழ்வு கடந்த வாரம் கிளிநொச்சியில் நடைபெற்றது.

உலகத் தமிழ் பண்பாட்டுக் கழக இலங்கைக் கிளையின் தலைவர் அருணாசலம் சத்தியானந்தம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், நூலின் முதற்பிரதியை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் பெற்றுக்கொண்டதுடன், நூல் அறிமுக உரைகளை யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா மற்றும் படைப்பாளியும் சமூக செயற்பாட்டாளருமான வெற்றிச்செல்வி (சந்திரகலா) ஆகியோர் நிகழ்த்தியிருந்தனர்.


படைப்பாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள் உள்ளிட்ட பலரின் பங்கேற்போடு நடைபெற்ற இந்நிகழ்வில், போர்க்கால அறிவியல் கண்டுபிடிப்புகளை அடையாளப்படுத்தும் வகையில் மங்கல விளக்குக்குப் பதிலாகக் குப்பி விளக்குகள் ஏற்றப்பட்டது பலரதும் கவனத்தைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# நூற்றாண்டு கால்கோள் விழா









பேராசிரியர் ஆ.சதாசிவத்தின் நூற்றாண்டு கால்கோள் விழா நிகழ்வானது அவர் பணியாற்றிய பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறையின் ஏற்பாட்டில், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கடந்த மாதம் சிறப்பாக நடைபெற்றது. தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் பிரசாந்தனின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கலைப்பீடாதிபதி கலாநிதி பிரபாத் ஏக்கநாயக்க பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.

பேராசிரியர் எம்.ஏ. நு ஃமான், பேராசிரியர் துரை மனோகரன் ஆகியோர் கருத்தரங்கினைத் தலைமையேற்று நெறிப்படுத்தினர். கலாநிதி சோதிமலர் ரவீந்திரன், கலாநிதி செ.சுதர்சன்

, கலாநிதி பெ. சரவணகுமார்,கலாநிதி எம்.எம். ஜெயசீலன், திருமதி ஆன்யாழினி சதீஸ்வரன், ச.வில்லரசன், ஜெப்ரி தங்கராஜ் ஆகியோர் பேராசிரியரின் நூல்கள் குறித்து சிறப்பாக உரையாற்றினர். அத்தோடு பேராசிரியர் சதாசிவத்தின் குடும்பத்தைச் சார்ந்து மகள் திருமதி பூங்கோதை பாலராஜனும், மருமகன் இதய மருத்துவ நிபுணர் யோ.பாலராஜனும் கலந்துகொண்டனர். திருமதி திருஞானேஸ்வரி சதாசிவம், பேராசிரியர் ஆ. சதாசிவம் எழுதி வெளிவந்தும் வெளிவராதும் இருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது அரசியல் நிலைப்பாட்டை இதுவரை வெளிப்படுத்தவில்லை

## முன்னாள் எம்.பி. சரவணபவன் விளக்கம்!

யாழ்ப்பாணம், மார்ச் 5

நான் அரசியல் ரீதியிலான கருத்துக்களை வெளிப்படுத்தியதாகவும், புலம்பெயர் ஊடகங்களில் செய்திகள் வந்துள்ளதாகவும் அறியமுடிகின்றது. அவ்வாறான எந்தவொரு அரசியல் நிலைப்பாட்டையும் நான் வெளிப்படுத்தவில்லை என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சரவணபவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் உள்ளதாவது:-

அண்மைக்காலமாக எனது தனிப்பட்ட தேவைகளுக்காகவும், ஓய்வுக்காகவும் வெளிநாடொன்றுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளேன். ஆனால், சில ஊடகங்களில் நான் தெரிவித்ததாக சில செய்திகள் வெளியிடப்படுகின்றன. நான் எனது அரசியல் நிலைப்பாட்டை வெளிப்படுத்தியதாகவும் தகவல்கள் உலவவிடப் பட்டுள்ளன.

அவ்வாறான எந்த நேர்காணலையும் நான் வழங்கவில்லை என்பதுடன், எனது அரசியல் நிலைப்பாட்டை இன்னமும் வெளிப்படுத்தவில்லை என்பதை பொதுமக்களுக்கு அறியத்தருகின்றேன் - என்றுள்ளது. (அ-ம-இ)



மனித உரிமைகள் செயற்பாட்டாளர் பிறிட்டோ பெர்னாண்டோ, யாழ்.வடமராட்சி ஊடக இல்லத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினருடன் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரது விவகாரம் உள்ளிட்ட நீதிகோரும் விடயங்கள் தொடர்பில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கலந்துரையாடினார். (ச-41-100)

# பெற்றோருக்கு தலைக்கவச விழிப்புணர்வு

தமது பிள்ளைகளுக்குத் தலைக்கவசங்களை அணிவிக்கத்தவறிய பெற்றோருக்கு வீதி விபத்து தொடர்பான விழிப்பு ணர்வுக் காணொளி யாழ். போக்குவரத்து பொலிசாரால் யாழ். பொலிஸ் நிலையத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காண்பிக்கப்பட்டது.

பிள்ளைகளுக்குத் தலைக்கவசம் அணிவிக்காதுவிடின் சட்டரீதியாக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என யாழ். மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அண்மையில் தெரிவித்திருந்தார். இந்த நிலையில் யாழ். பொலிஸ் தலைமையகத்தில் 85 பெற்றோருக்கு வீதி விபத்துகள் தொடர்பிலான காணொளி வகுப்பு நடத்தபட்டது. (ச-25,125)

## மூவாயிரத்துக்கு...

என்று எதிர்பார்க்கப்படுகின்றது. கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா எதிர்வரும் 14ஆம் மற்றும் 15ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இந்தத் திருவிழாவுக்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையில், இந்தியாவில் இருந்து திருவிழாவில் கலந்து கொள்வதற்காக இதுவரை மூவாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் முற்பதிவு செய்துள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அத்துமீறிய மீன்பிடிப் பிரச்சினைகள் காரணமாக, கடந்த வருடம் இந்தத் திருவிழாவில் கலந்துகொள்வதை இந்திய மீனவர்கள் புறக்கணித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

**வேலையாட்கள் தேவை**

சமையல் உதவியாளர், றொட்டி தயாரிப்பாளர், உணவு பரிமாற்றுபவர், சமையலாளர் தேவை

தொடர்புகளுக்கு:

**076 423 6862**

## படைக்குறைப்பு...


தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது, '2030ஆம் ஆண்டளவில் படைக்குறைப்புச் செய்யப்படவுள்ள எண்ணிக்கை தொடர்பில் ஜனாதிபதி வெளியிட்டுள்ள அறிவிப்பு தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை எதிரணி உறுப்பினர்கள் கூறுகின்றனரே?' எனக் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு அமைச்சர் தெரிவித்ததாவது:- 'இராணுவத்தின் தொழில்சார்தன்மை மேம்படுத்தப்படும் என்றுதான் ஜனாதிபதி கூறியுள்ளார். பாதுகாப்பு நிபுணர்களின் ஆலோசனைகளுக்கு அமைய அடுத்த ஐந்தாண்டுகளுக்கு பிறகு செயற்படுத்தப்படும் திட்டத்தை ஜனாதிபதி முன்வைத்துள்ளார். படைகளிலுள்ள ஆட்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டாலும் தொழில்நுட்பம் உள்ளிட்ட விடயங்களில் இராணுவம் வலுப்படுத்தப்படும். அதற்காகவே பாதுகாப்பு அமைச்சுக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்து சமுத்திரத்தை பாதுகாப்பதில் எமது தலையீடு அதிகம் தேவைப்படுகின்றது. அதனால்தான் கடற்படைக்கும் இலக்குகள் நிர்ணயிக்கப் பட்டுள்ளன. பாதுகாப்புத் தரப்பால் தீர்மானம் எடுக்கப்பட்டு, இராணுவ முகாமொன்று அகற்றப் பட்டால்கூட, எவ்வித ஆராய்வும் இன்றி தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எனக் கருத்து வெளியிடும் கூட்டமொன்று உள்ளது. தேசிய பாதுகாப்பு என்பதை அரசியல் துருப்பாகப் பயன்படுத்தி வருகின்றனர். இது அரசியல் முடிவல்ல. விசேட நிபுணர்களின் ஆலோசனைக்கமைய பாதுகாப்பு மூலோபாயத்துக்காக எடுக்கப்படும் முடிவுகளாகும்' - என்றார். (அ-ம-44)

## மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 09 . 1962



மறைவு 24 . 02 . 2025

### சிவசுப்பிரமணியம் குமாரதாசன்

யாழ் மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் Bois-Colombes, பிரித்தானியா Ilford ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம்-குமாரதாசன் அவர்கள் கடந்த 24.02.2025 திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம் (அதிபர்-மல்லாகம் மகா வித்தியாலயம்) -சறோஜினிதேவி தம்பதியின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான தங்கராசா (இன்சுரன்ஸ்-தங்கராசா)-சாரதாதேவி தம்பதியின் பாசமிகு மருமகனும் யோகேஸ்வரி (முன்னாள் தொண்டர் ஆசிரியை அல்வாய் அம்பாள் வித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும் ஹறிசன், வருணி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சகானா அவர்களின் அன்பு மாமனாரும் உஷா (பிரான்ஸ்), பிரபா (பிரித்தானியா), சிவதாசன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் குகதாஸ் (பிரித்தானியா), பிருந்தா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ரமணன் (பிரித்தானியா), பிரகாமி (நெதர்லாந்து) ஆகியோரின் அன்பு உடன் பிறவாச் சகோதரரும் ஜெயக்குமார் (பிரான்ஸ்), வாமதேவன் (பிரித்தானியா), சுகந்தி (பிரான்ஸ்), விக்கினேஸ்வரன் (பிரித்தானியா), பரமேஸ்வரன் (பிரித்தானியா), புவனேஸ்வரி (பிரித்தானியா), விமலேஸ்வரன் (பிரித்தானியா), ஜெகதீஸ்வரன் (பிரித்தானியா), குகனேஸ்வரன் (பிரித்தானியா), சிவனேஸ்வரன் (அல்வாய்), இராஜேஸ்வரி (பிரித்தானியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ரிச்சாட், சோதியா, நிதர்சன், ஜனாத்தன் ஆகியோரின் பாசமிகு தாய்மாமனும் ராகவியின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.03.2025) புதன்கிழமை பிரித்தானியாவில் நடைபெறும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

சாரதா இல்லம்,
அல்வாய் வடக்கு,
அல்வாய்.

தகவல்
மைத்துனர்
VVT. சிவா
[illegible]

## மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 01 . 1949



மறைவு 04 . 03 . 2025

### மண்டலநாயகம் ஞானேந்திரன்

தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும் கட்டுவனை வதிவிடமாகவும் ஞானவைரவர் வீதி உரும்பிராயை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட மண்டலநாயகம் ஞானேந்திரன் அவர்கள் நேற்று (04.03.2025) செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மண்டலநாயகம் ஞானம்மா தம்பதியரின் அன்பு புதல்வனும் காலஞ்சென்ற வர்களான செல்லத்துரை-சின்னம்மா தம்பதியினரின் மருமகனும் செல்வதேவி அவர்களின் அன்புக் கணவரும் துஷிதா, தர்சீலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் துவாரகன், சர்வதன், டிலக்சன், கிருசாந், லதுர்சன், கேதினி அவர்களின் மாமனாரும் தக்ஷவியின் பேரனும் காலஞ்சென்ற ஞானேஸ்வரி மற்றும் ஞானகாந்தி, ஞானரூபி, ஞானரதி, ஞானகுமார், ஞானகுமாரி ஆகியோரின் அன்பு சகோதரனும் விஜிதரன், விஜிகுமரன், விஜிகரன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.03.2025) புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ஞானவைரவர் வீதி
உரும்பராய் கிழக்கு
உரும்பிராய்.

தகவல்
குடும்பத்தினர்
077 833 2888

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூநகரி, மன்னார் உள்ளிட்ட

# 5 பிரதேசசபைகளுக்கு தேர்தல் நடத்தப்படாது

கொழும்பு, மார்ச் 5

பூநகரி, மன்னார் உள்ளிட்ட ஐந்து பிரதேசசபைகளுக்குத் தேர்தல் நடத்தப்படாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் பிரதேச சபை, தெஹியத்தகண்டிய பிரதேச சபை (அம்பாறை மாவட்டம்) பூநகரி பிரதேச சபை (கிளிநொச்சி மாவட்டம்) மற்றும் கல்முனை மாநகர சபை ஆகியவற்றுக்கான தேர்தல்களே இப்போது அறிவிக்கப்படவில்லை.

இவை தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையில் இருக்கின்ற காரணத்தால் தேர்தல் அறிவிப்புகள் இந்தச் சபைகளுக்கு விடப்படவில்லை. அத்துடன், காலி மாவட்டம் எல்பிட்டிய பிரதேச சபைக்கான தேர்தல் அண்மையில் நடந்து முடிந்திருப்பதால் அச்சபைக்கான தேர்தலும் இப்போது நடைபெறாது. (ம)

## வேலையாள் தேவை

இணுவிலில் அமைந்துள்ள ஸ்ரூடியோ ஒன்றிற்கு அலுவலக உதவியாளர் (பெண்கள் மட்டும்) தேவை.

தொடர்புகளுக்கு:-

**077 930 7412**

(CS/57654) J-1

## பணிப்பெண் தேவை

மாவிட்டபுரம் பகுதியில் தங்கி நின்று பராமரிப்பதற்கு வேலையாள் தேவை.

தொடர்புகளுக்கு:

**077 044 0155**

## சமையல் வேலைவாய்ப்பு

உடுவில் மகளிர் கல்லூரியில் சமையல் வேலைவாய்ப்புக்கு வெற்றிடம் இருப்பதால் 55 வயதிற்குட்பட்டவர்கள் நேரில் வருகை தரவும்.

இடம் : உடுவில் மகளிர் கல்லூரி

காலம் : 05.03.2025 - 07.03.2025

நேரம் : காலை 8.30 - மதியம் 1.00

(CR/44480) J-1

## கூறுவிலை கோரல்

சைவபரிபாலன சபை வளாகத்தில் பொதுநோக்கு கட்டடம் அமைப்பதற்கான கூறுவிலை பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடம் இருந்து கோரப்படுகிறது. வேலையின் விபரம் அடங்கிய விண்ணப்பப்படிவத்தினை சபை அலுவலகத்தில் பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தினை மூடிய கடித உறையின் இடது பக்க மூலையில் "பொதுநோக்கு கட்டடம்" எனக் குறிப்பிட்டு "தலைவர், சைவபரிபாலன சபை, இல. 66 கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 19.03.2025ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

தலைவர்
சைவபரிபாலன சபை.

(CS/57652) J-1

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




திருமதி தர்ஷினி சுதாகரன்
BA, PGDE, MEd, SLPS III

எமது பாடசாலையில் 18.12.2023 ம் திகதி தொடக்கம் இன்றுவரை பிரதி அதிபராகக் கடமையாற்றி இன்று (05.03.2025) யா/ போக்கட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் அதிபராக கடமையேற்கும் திருமதி தர்ஷினி சுதாகரன் அவர்களை பாராட்டி வாழ்த்துவதோடு எமது பாடசாலையில் அவர் ஆற்றிய பணிகளை பாராட்டி நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யா/ மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலை

ஆசிரியர் நலன்புரிக் கழகமும், பாடசாலைச் சமூகமும்.

(CR/44422) J-1

# திறனாய்வுப் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச்.5

புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டியும் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வும் அதிபர் சி.சிவகுமார் தலைமையில் நாளை வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சோ.இராமநாதன், சிறப்பு விருந்தி னராக வலிகாமம் கல்விவலய உடற்கல்விப்பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் மேஜர் ந.கஜேந்திரன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (ச-41)

## கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு

### 2025 ஆம் ஆண்டிற்கான மத்திய பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்ட கடைகளை நீண்ட கால குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல்

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் காணப்படும் மத்திய பேருந்து நிலைய வீதியில் அமைக்கப்பட்ட கடைகளை 2025 ஆம் ஆண்டு நீண்ட கால் குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :- 05.03.2025 முற்பகல் 9.00 மணி தொடக்கம் 19.03.2025 பி.ப 02.00 மணி வரை (அலுவலக நாட்களில் மட்டும்)

கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :-20.03.2025 மு.ப 10.00 மணி வரை

கேள்விப்பத்திரம் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி :- 20.03.2025 மு.ப 10.30 மணி

| இல | கடை இலக்கம் | கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் ரூபா | கடைக்குரிய மாதாந்த வாடகைத் தொகை ரூபா | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (VAT,NB) நீங்கலாக |
|---|---|---|---|---|---|
| முல்லைத்தீவு உப அலுவலகம் | | | | | |
| 1 | கடை இல - 01 | 2,000.00 | 19,200.00 | 8,000.00 | **1,920,000.00** |
| 2 | கடை இல - 02 | 2,000.00 | 19,200.00 | 8,000.00 | **1,920,000.00** |
| 3 | கடை இல - 03 | 2,000.00 | 19,200.00 | 8,000.00 | **1,920,000.00** |
| 4 | கடை இல - 04 | 2,000.00 | 19,200.00 | 8,000.00 | **1,920,000.00** |
| 5 | கடை இல - 05 | 2,000.00 | 19,200.00 | 8,000.00 | **1,920,000.00** |
| 6 | கடை இல - 06 | 2,000.00 | 19,200.00 | 8,000.00 | **1,920,000.00** |
| 7 | கடை இல - 07 | 2,000.00 | 19,200.00 | 8,000.00 | **1,920,000.00** |
| 8 | கடை இல - 08 | 2,000.00 | 16,800.00 | 7,000.00 | **1,680,000.00** |
| 9 | கடை இல - 09 | 2,000.00 | 16,800.00 | 7,000.00 | **1,680,000.00** |
| 10 | கடை இல - 12 | 2,000.00 | 16,800.00 | 7,000.00 | **1,680,000.00** |
| 11 | கடை இல - 15 | 2,000.00 | 16,800.00 | 7,000.00 | **1,680,000.00** |

**நிபந்தனைகள்:**

1. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. கேள்விப்பத்திரத்தினை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு. என்னும் முகவரிக்கு முத்திரை இட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் மத்திய பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்ட கடை இல .....என கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் 20.03.2025 முற்பகல் 10 மணிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென கரைதுறைப்பற்று பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். கேள்வி நேரத்தின் பின்னர் கிடைக்கும் படிவங்கள் நிராகரிக்கப்படும்.
3. கேள்விப்பத்திரங்களை பெற விரும்புவர்கள் கிராமசேவையாளரினால் வழங்கப்பட்ட வதிவிடச்சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டைப் பிரதியுடன் கரைதுறைப்பற்று பிரதேசசபையின் தலைமை அலுவலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.
4. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்பட மாட்டாது எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் எதுவும் மீளளிக்கப்பட மாட்டாது.
5. குறித்த கடையின் ஒப்பந்ததாரர்கள் எந்த வகையிலும் உப வாடகைக்கு வழங்கவோ உரிமை மாற்றம் செய்யவோ முடியாது.
6. நீண்ட கால குத்தகை கடைகளுக்கு மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்தப்படல் வேண்டும்.
7. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களிற்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வி தொடர்பிலும் இறுதி முடிவெடுக்கவும் கேள்விச்சபைக்கே பூரண அதிகாரமுண்டு.
8. அதிகூடிய கேள்வித்தொகை கூறும் கேள்விதாரருக்கு சபையுடனான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் மீள் கேள்வி அறிவித்தல் செய்யப்படும்.. ஏற்றுக்கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்பு பணம் மீளளிக்கப்படமாட்டாது.
9. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் அறிவித்தல் செய்யப்பட்ட திகதியிலிருந்து 07 நாட்களுக்குள் ஒரே தடவையில் கேள்வித் தொகையின் முழுத் தொகையையும் பி.ப 2.30 மணிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்த உடன்படிக்கை பூர்த்தி செய்தல் வேண்டும்.
10. சபையின் அனுமதியின்றி எதுவித திருத்த வேலைகள்,மாற்றங்கள்,புனரமைப்பு வேலைகளும் மேற்கொள்ள முடியாது.
11. தங்களால் நடத்த உத்தேசிக்கப்படும் வியாபாரத்தின் தன்மை சபையால் பரிசீலிக்கப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படும்.
12. மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளின் பிரகாரம் நடக்க தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டு செலுத்தப்பட்ட பணத்தொகைகள் மீளளிப்பு செய்யப்படமாட்டாது என்பதுடன் அவர்களது பெயர் தவறுநர் பட்டியலில் அட்டவணைப்படுத்தப்படும்.
13. சபையின் செயலாளரின் இந்த ஒப்பந்தம் தொடர்பாக எதுவித முடிவையும் ஏற்க வேண்டும். இது தொடர்பாக செயலாளருக்கு எதிராக நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்க முடியாது.
14. கேள்வி சம்பந்தமாக மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

செயலாளர்,
கரைதுறைப்பற்று பிரதேச சபை,
முல்லைத்தீவு.
05.03.2025

(CR/44485) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் 04 . 09 . 1935

மறைவு 01 . 03 . 2025

## சிவசம்பு மனோன்மணி

திருநெல்வேலி பத்திரகாளி கோவிலடியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு மனோன்மணி (தையல்நாயகி) அவர்கள் கடந்த 01.03.2025 சனிக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - மீனாட்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா- செல்வம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவசம்பு ( முன்னாள் உதவி அரசாங்க அதிபர் சண்டிலிப்பாய் ) அவர்களின் அன்பு மனைவியும், உதயராணி (ஜேர்மனி), உதயகுமார் (கலிபோனியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பெறாமகள்களான ரேணுகா (இலங்கை) , ராதிகா (நியூயோர்க்) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற குமாரசாமி (கனடா) மற்றும் செல்வராஜா (கனடா), கமலராஜா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கணேசலிங்கம், சசிகலா, ஸ்ரீதரன், ஜெயாநந்தன் ஆகியோரின் மாமியும் ஆரபி, மயூரன், ஆரணி, ஆதித்தன், திவ்வியா, வீஷ்மன், அபிநயா ஆகியோரின் பேர்த்தியும் செல்வராணி, புவனேஸ்வரி, தேவராணி, காலஞ்சென்றவர்களான திலகவதி, சரோஜினிதேவி மற்றும் விநாயகமூர்த்தி, சந்திரவதனா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு பற்றிய மேலதிக விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**உதயபவனம்**
**பத்திரகாளி கோவிலடி,**
**திருநெல்வேலி மேற்கு,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல் : குடும்பத்தினர்**
மகள் - உதயராணி - 0049 157 760 04554
மகன் - உதயகுமார் - 001 408 368 3366
075 868 0368, 077 946 5372

(CS/57656) J-1

# பேருந்து நிலையம் திறப்பு



புனரமைக்கப்பட்ட இணுவில் மத்திய பேருந்துத் தரிப்பிட நிலையத் திறப்பு நிகழ்வு நேற்று செவ்வாய்க் கிழமை இணுவில் இந்து விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் கழகத்தின் தலைவர் செ.இலகுநாதன் தலைமையில் நடைபெற்றது.

இணுவிலில் பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையில் இடம்பெற்ற விபத்தில் அநியாயமாக உயிரிழந்த இளம் தொழிலதிபர் ஆனந்தராசா சயந்தனின் நினைவாக இந்தப் பேருந்துத் தரிப்பிட நிலையம் புனரமைக்கப்பட்டுத் திறந்துவைக்கப்பட்டுள்ளது. இணுவில் இந்து விளையாட்டுக் கழகத்தினரின் முயற்சியில் கழக உறுப்பினரான ஜெ.இராகுலனின் முழுமையான நிதிப் பங்களிப்பில் இந்தப் பேருந்துத் தரிப்பிடம் புனரமைப்புச் செய்யப்பட்டு மக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

(ச-125,66)

# 17ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 18 . 05 . 1982

மறைவு 05 . 03 . 2008

## செல்வன் இராசேந்திரம் கருணாகரர்

(யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவன், முன்னாள் முகாமைத்துவ உதவியாளர், மாவட்ட செயலகம் – வவுனியா)

கண் முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து நீங்கள் விண் நோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாது உங்கள் நினைவுகள்.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

உன் பிரிவால் வாடும்
பெற்றோர்

(CS/54201) J-1

# மரண அறிவித்தல்



தோற்றம் 18 . 08 . 1951

மறைவு 04 . 03 . 2025

## றெக்ஸ் ஜீவரட்ணம் மேரி (வசந்தா)

கரம்பனைப் பிறப்பிடமாகவும், மிருசுவில் தெற்கு மிருசுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட றெ.ஜீ.மேரி அவர்கள் நேற்று (04.03.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோசப் - எலிசபெத் தப்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராசரட்ணம் - மேரிகெலன் தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற றெக்ஸ் ஜீவரட்ணம் (றெக்ஸி) அவர்களின் அன்பு மனைவியும், நிசாந்தினி, சத்தியறூபன் (பாதுகாப்பு உத்தியோகத்தர், மக்கள் வங்கி, கைதடி), ஞானறூபிகா (முன்பள்ளி ஆசிரியர் மிருசுவில்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜயந்தன் (J.S.R), ஜானி, யூட் அருணா ஆகியோரின் அன்பு மாமியும், அனா, எல்விஸ், கெவின்சன், தருண், லக்ஷயன், ஜஸ்ரினா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் புதவுடல் இன்று (05.03.2025) புதன்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித நீக்கிலார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நீக்கிலார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**மிருசுவில் தெற்கு,**
**மிருசுவில்.**

**தகவல் :**
**குடும்பத்தினர்**
**077 188 3144**

(CS/57651) J-1

# மரண அறிவித்தல்



தோற்றம் 03 . 10 . 1964

மறைவு 02 . 03 . 2025

## இராமசாமி இரத்தினசிங்கம்

தெருமூடி மடத்தடி, புலோலி வடமேற்கை பிறப்பிடமாகவும், சப்பச்சிமாவடி சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட இராமசாமி இரத்தினசிங்கம் அவர்கள் கடந்த (02.03.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமசாமி-சிவக்கொழுந்து தம்பதியின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம்- இராசம்மா தம்பதியின் அன்பு மருமகனும் கோகுலநிதி (நிதி) அவர்களின் பாசமிகு கணவரும் கஜனி (விஞ்ஞானபீடம்-யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), சுஜானி (தரம் 10 யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இராஜேந்திரன் (அவுஸதிரேலியா), இராஜேஸ்வரி (சுவிஸ்), சிவனேஸ்வரி, பரமேஸ்வரி (அவுஸ்திரேலியா), ஸ்ரீஸ்கந்தராசா (லண்டன்), அருளானந்தம் (லண்டன்), கிருஷ்ணகுமார் (இலங்கை வங்கி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கலாநிதி, தயாநிதி (சுவிஸ்), யோகலட்சுமி (அவுஸ்திரேலியா), ஆனந்தவெற்றிவேல் (சுவிஸ்), சுபேந்திரன் (ஓய்வு நிலை அதிபர்), துஷ்யந்தினி (லண்டன்) சுவர்ணா (லண்டன்), கஜனி (இலங்கை மின்சார சபை) பாசமிகு மைத்துனரும் பரராஜசிங்கம், ஸ்ரீதரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.03.2025) புதன்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**சப்பச்சிமாவடி,**
**சாவகச்சேரி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 195 6089**
**077 412 9330**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.நா.வின்...

இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 'நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல்' தொடர்பான பரிந்துரைகளுக்கு பிரிட்டன், வட அயர்லாந்து, கனடா, மலாவி, மொன்டிநீக்ரோ, வடக்கு மசிடோனியா ஆகிய நாடுகள் இணைய னுசரணை வழங்கியிருந்தன.

அந்த நாடுகள் விடுத்துள்ள கூட்டறிக்கையில் உள்ளதாவது:-

இலங்கையில் கடந்த வருடம் தேர்தல்கள் அமைதியான முறையில் இடம்பெற்றதையும் அமைதியான ஆட்சி மாற்றத்தையும் நாங்கள் வரவேற்கின்றோம். புதிய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பையேற்று நான்கு மாதங்களே ஆகின்றன என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். இலங்கை இந்த மாற்றத்தை பயன்படுத்தி, தான் எதிர்கொண்டுள்ள சவால்களுக்குத் தீர்வைக் காண்பதற்கு முயலவேண்டும் என நாங்கள் ஊக்குவிக்கின்றோம்.

நல்லிணக்க விடயங்களில் அர்த்தபூர்வமான முன்னேற்றத்தை ஏற்படுத்துவது குறித்த அரசாங்கத்தின் அர்ப்பணிப்பையும், நிலங்களை மீளக்கையளிப்பது, வீதித்தடைகளை அகற்றுவது, வடக்கு கிழக்கில் உள்ள மக்கள் தங்கள் அன்புக்குரியவர்களை நினைவுகூர அனுமதிப்பது ஆகிய நடவடிக்கைகளையும் நாங்கள் வரவேற்கின்றோம். அத்துடன், இலங்கையின் அரசியலமைப்பின் அடிப்படையில் அதிகாரங்களைப் பகிர்வதற்கான ஆட்சிமுறை சீர்திருத்தங்களில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கான அர்ப்பணிப்பையும் நாங்கள் வரவேற்கின்றோம்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை மாற்றீடு செய்வது குறித்த தனது நோக்கத்தை அரசாங்கம் வெளியிட்டுள்ளதை நாங்கள் கருத்திற்கொண்டுள்ளோம். புதிய சட்டம் சர்வதேச தராதரங்களுக்கு ஏற்ற விதத்தில் காணப்படவேண்டும் என நாங்கள் மீள வலியுறுத்துகின்றோம். பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்யவேண்டும் என நாங்கள் அறிவுறுத்துகின்றோம்.

ஊழல் ஒழிப்பு மற்றும் மனித உரிமை விவகாரங்களில் முன்னேற்றத்தைக் காண்பதற்கு அரசாங்கம் முயலவேண்டும். இந்தத் தருணத்தில் மேற்கொள்ளப்படும் முழுமையான நல்லிணக்க மற்றும் பொறுப்புக்கூறல் செயற்பாடுகளும், பாதிக்கப்பட்ட மக்களின் ஆதரவைப் பெற்றதாக அமையவேண்டும். அத்தோடு, அவை கடந்தகால பரிந்துரைகளின் மேல் கட்டியெழுப்பப்பட்டதாக சர்வதேச தராதரத்தினை பூர்த்திசெய்வதாகக் காணப்படவேண்டும் என நாங்கள் வலியுறுத்துகின்றோம் - என்றுள்ளது.

(அ-ம-இ)

## பொருளாதாரப்...

சர்வதேச நாணயநிதியத்தின் இலங்கைக்கான மூத்த தலைவர் பீற்றர் ப்ருவர் இலங்கையின் பொருளாதார நிலை தொடர்பில் தெரிவித்ததாவது:-

இலங்கைக்கான நிதியுதவியின் மூன்றாம்கட்ட மதிப்பீட்டுப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. இதன்மூலம் இலங்கையின் நிதியிருப்பும் பொருளாதார மேம்பாடும் அதிகரித்துள்ளன. இலங்கையின் செயற்றிட்டங்களும் பொருளாதார மீள்வருகைக்கான முயற்சிகளும் உண்மையில் பாராட்டப்பட வேண்டியவை. கடந்த ஐந்து வருடங்களில் இழந்த தனது வருமானத்தில் 40 வீதமான வற்றை இலங்கை மீட்டெடுத்துள்ளது. இலங்கையின் பொருளாதார ஏற்றம் வெளிப்படையாகத் தெரிகின்றது. இந்த வளர்ச்சியைத் தொடர்ந்தும் தக்கவைக்கக்கூடிய முன்னெடுப்புக்களையும் இலங்கை மேற்கொண்டுள்ளது. இது வரவேற்கப்படவேண்டிய விடயமாகும் - என்றார்.

(அ-ம-44)

## சங்குக்...

ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகச் செயற்பட்ட கட்சிகளை மீண்டும் இணைந்து செயற்பட வருமாறு தமிழரசுக் கட்சியின் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் அழைப்பு விடுத்திருந்தார். இது தொடர்பில் அவரால் அனுப்பப்பட்ட கடிதத்துக்கு பதில் கடிதம் அனுப்பிய சித்தார்த்தன், 'தமிழரசுக் கட்சியினர் விரும்பினால், தமிழ்க் கட்சிகள் பல சேர்ந்து அமைத்துள்ள புதிய கூட்டணியில் இணையலாம்' என்று குறிப்பிட்டிருந்தார். இதையடுத்தே, தமிழ்க் கட்சிகளின் புதிய கூட்டில் தமிழரசுக் கட்சி இணையாது என்று நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் வைத்து இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழரசுக் கட்சியோடு ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப். ஆகிய மூன்று கட்சிகளுமாக நான்கு கட்சிகள் இணைந்து கூட்டமைப்பாகச் செயற்பட்டுவந்திருந்தோம். ஆனால் கடந்த உள்ளூராட்சித் தேர்தல் அறிவிக்கப்பட்ட காலத்தில் தனித்தனியாக போட்டியிட்டு கூட்டாக செயற்படுவதென தமிழரசுக் கட்சி தீர்மானித்தது.

ஆனால் அதனைத் தவறாகச் சித்தரித்து 'தமிழரசு தனிவழி' என்றவாறாக பரப்புரை மேற்கொள்ளப்பட்டு கூட்டமைப்பில் இருந்து கட்சிகள் வெளியேறியிருந்தன. நாங்கள் கூட்டமைப்பை உடைக்கவேண்டுமென நினைக்கவில்லை. இப்போதுகூட முன்னரைப் போல மீளவும் கூட்டமைப்பாக ஒன்றுசேர்ந்து இயங்குவதற்கான அழைப்பையே விடுத்திருக்கிறோம்.

அந்த முயற்சியின் தொடராக கூட்டமைப்பில் இருந்த கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்து கலந்துரையாடியிருந்தேன். கட்சிகளின் தலைவர்களை நான் சந்தித்தபோது சாதகமாகப் பரிசீலிப்பதாகச் சொன்னவர்கள் மறுநாளே தாங்கள் ஒரு புதிய கூட்டணியை உருவாக்கியிருக்கின்றனர். இப்படி ஒரு திட்டம் அவர்களிடம் இருக்கிறது என்றால் அதனை நேரடியாகவே எங்களிடத்தே சொல்லியிருக்கலாம். அதைவிடுத்து ஏமாற்றுவித்தை காட்டியமையே எமக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. நாங்கள் அவர்களின் புதிய கூட்டணியை எதிர்க்கவில்லை. அது அவர்களது உரிமை. ஆனால் அவர்களின் செயற்பாடே எமக்கு ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

தாம் ஒரு கூட்டணியை அமைத்துள்ளதாகவும் எங்களது கட்சியின் மத்திய குழுவோடு பேசிவிட்டு வருமாறும் புளொட் தலைவர் சித்தார்த்தன் எனக்குக் கடிதம் அனுப்பியுள்ளார். இவ்வாறு அவர்கள் கூறுவதில் என்ன அர்த்தம் உள்ளது. நாங்கள் ஒன்றும் சில்லறைக் கட்சி அல்ல. எம்மை யாரும் மலினப்படுத்தக்கூடாது.

ஈழத் தமிழினத்திற்காக நாங்கள் மீளவும் கூட்டமைப்பாக இயங்குவோம் வாருங்கள் என்றே இணக்கத்தின் அடிப்படையில் அழைப்பு விடுத்தோம். அதைவிடுத்து உங்களது கூட்டணியுடன் நாங்கள் வரப்போவதாகச் சொல்லவில்லை. இந்த விவகாரத்தில் மிகவும் அப்பாவித்தனமாக நாங்கள் இருந்துவிட்டோமோ என்று எண்ணத் தோன்றுகிறது. ஆனால் நாங்கள் இப்போதும் கூறுகிறோம் கூட்டமைப்பில் இருந்து செயற்பட்டவர்கள் மீளவும் கூட்டமைப்புக்கு வருவதற்கான கதவுகள் திறந்தே உள்ளன - என்றார்.

(அ-ம-125-66)

## இந்திய...

ராமேஸ்வரம் மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர். தமது போராட்டத்தின் ஒரு பகுதியாகவே, அவர்கள் நேற்றுத் திருவோடு ஏந்திப் போராடியுள்ளனர்.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மீனவர்களை தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி சந்தித்துக் கலந்துரையாடல் நடத்தியுள்ளார். இலங்கைச் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை விடுவிப்பதற்கு முடியுமான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்ற வாக்குறுதியையும் தமிழக மீனவர்களிடத்தில் ஆளுநர் ரவி வழங்கியுள்ளார்.

தமிழகத்தின் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள் பலரும், போராட்டத்தைக் கைவிடுமாறு மீனவர்களைக் கோரியுள்ள போதிலும், மீனவர்கள் அதற்கு உடன்படவில்லை. காலவரையறை அற்ற முறையில் தமது போராட்டம் தொடரும் என்று மீனவர்கள் அறிவித்துள்ளனர்.

(அ-ம-இ)

## 173 கிலோ...

வெற்றிலைக்கேணிக் கடற்படையினருக்குக் கிடைத்த இரகசியத்தகவலையடுத்து, நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பிலேயே இந்தக் கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை. மருதங்கேணிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர்.

(அ-ம-66-27)

## செம்மணிப்...

புதைகுழி தொடர்பான கலந்தாய்வு யாழ்ப்பாணம் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதியின் தலைமையில் நேற்று மாலை நடைபெற்றது. இந்தக் கலந்தாய்வில், முறைப்பாட்டாளர் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி கனகரத்தினம் சுகாஷும், காணாமலாக்கப்பட்டோரது சங்கத்தின் சார்பில் சட்டத்தரணி தற்பரனும் ஆஜராகியிருந்தனர்.

இதன்போதே, என்புத் தொகுதிகள் மீட்கப்பட்ட பகுதிக்கு பொலிஸ் பாதுகாப்பும், அதற்கு மேலதிகமாக சம்பந்தப்பட்ட மயானத்தின் அபிவிருத்திச் சங்கத்தின் உறுப்பினர்களைக் கொண்ட குழுவின் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. இந்தக் கோரிக்கை நீதவானால் ஏற்கப்பட்டதுடன், சிந்துப்பாத்தி இந்துமயானத்தின் அபிவிருத்தி சங்கத்தின் ஐந்து உறுப்பினர்களின் பெயர் விபரங்களை வழங்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

(அ-ம-26-27)

## கைவிடப்பட்டது...

பணிப்புறக்கணிப்பு நேற்று மாலை முதல் கைவிடப்பட்டுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை நிர்வாகத்திடம் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அவசர சிகிச்சை தவிர்ந்த ஏனைய சிகிச்சைகளை இடைநிறுத்தி அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் கடந்த வியாழக்கிழமை முதல் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

அரச மருத்துவ அதிகாரிகளின் தாய்ச் சங்கத்துடன் யாழ் போதனா மருத்துவமனைக் கிளைச் சங்கம் கலந்துரையாடிய பின்னர், மட்டுப்படுத்தப்பட்ட அளவில் போராட்டம் தொடர்ந்து வந்தது. இதைத் தொடர்ந்தே நேற்று மாலைமுதல் போராட்டம் கைவிடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமது கோரிக்கைகளுக்குத் தீர்வை வழங்குவதற்காக ஒரு வாரத்துக்கு அவகாசம் வழங்கியே இந்தப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

(அ-ம-26)

## துண்டானது...

வாள்வெட்டுத் தாக்குதலில் இளைஞரின் கைவிரல் துண்டானது.

களஞ்சியசாலை ஒன்றுக்குள் மோட்டார் சைக்கிளில் வருகைதந்த இருவர் அங்கு நின்ற இளைஞர் மீது வாள்வெட்டுத் தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பிச்சென்றுள்ளனர்.

வாள்வெட்டுத் தாக்குதலுக்கு இலக்கான இளைஞர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவரின் கைவிரலை பொருத்தும் சிகிச்சைகளை மருத்துவர்கள் முன்னெடுத்துள்ளனர். சந்தேகநபர்களைக் கைதுசெய்யும் நடவடிக்கைகள் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

(அ-ம-125-27-20)

## தவறி...

பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட அவர் சிகிச்சையின்போது நேற்றுமுன்தினம் இரவு காலமானார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நா.பிறேம்குமார் மேற்கொண்டார்.

(அ-ம-இ-26)

## உன்னிப்பாக...

உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றோம் என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. கிழக்கில் கல்முனை பகுதியில் முஸ்லிம் அடிப்படைவாத குழுவொன்று தோற்றம் பெற்றுள்ளது என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஏற்கனவே தெரிவித்த கருத்துத் தொடர்பில் அமைச்சர் நளிந்தவிடம் கேட்கப்பட்டது. இதன்போது அமைச்சர் நளிந்த தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாணத்தை மையமாகக் கொண்ட அடிப்படைவாதக் குழுவொன்று தொடர்பில் தகவல் கிடைத்துள்ளது. அது தொடர்பில் புலனாய்வுப் பிரிவினரும் பாதுகாப்புப் பிரிவினரும் அவதானம் செலுத்தியுள்ளனர். அந்தக் குழு நெருக்கமாகக் கண்காணிக்கப்படுகின்றது. அதன் செயற்பாடுகள் தொடர்பில் பாதுகாப்புப் பிரிவினர் மிகவும் எச்சரிக்கையுடன் உள்ளனர் - என்றார்.

(அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

கொழும்பு நகரில் அமைந்துள்ள PPT நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.

- முகாமையாளர்
- அலுவலக உதவியாளர்
- காசாளர்
- பேருந்து நடத்துநர்

(உணவு மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்படும்)

தொடர்பு: 077 386 6250



## தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 40 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பெற்றுக் கொள்ளலாம். விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- Whatsapp:- 0044 743 801 9204




## சுவாமிபீடம் திறந்துவைப்பு

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தின் சுவாமி தரிசன மண்டபத்தில், புதிதாக மரத்தினால் செதுக்கப்பட்ட சுவாமிபீடம், சமயக் கிரியை வழிபாடுகளுடன் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை திறந்துவைக்கப்பட்டது. பாடசாலை அதிபர் கே.தவகீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கொழும்புத்துறை வதரிபீட விநாயகர் ஆலய பிரதம குரு, பூஜை வழிபாடுகளை நடத்திவைத்தார்.

(ச-25-17)


## சைவ வித்தியா விருத்திச் சங்கம்
## ஆசிரியர் பணி வெற்றிடம்

எமது பராமரிப்பில் இயங்கும் சிறுவர் இல்லங்களில் (உரும்பிராய் மற்றும் திருநெல்வேலி) சிறார்களுக்கு பிரத்தியேக வகுப்புகள் நடாத்துவதற்கு பின்வரும் பாடங்களுக்குத் தகுதி வாய்ந்த ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. தமிழ் - க.பொ.த (உயர்தரம்)
2. ICT தரம் 6 - 11
3. தரம் 4-5 (புலமைப் பரிசில் பரீட்சை)
4. இந்து நாகரிகம்
5. ஆங்கிலம் தரம் 6 - 13 வரை
6. நடனம் - தரம் 6 - 13 வரை
7. தையல்
8. மிருதங்கம்
9. ஓகன்

விண்ணப்பங்கள் 12.03.2025 இற்கு முன்பாக நேரிலோ அல்லது தபாலிலோ எதிர்பார்க்கப்படுகின்றன.

சைவ வித்தியா விருத்திச் சங்கம்
கலாசாலை வீதி, திருநெல்வேலி.

திரு.த.தவரூபன்
செயலாளர்

(CR/4481) J-1


## அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள்

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் வெற்றிடமாகக் காணப்படும் அதிபர் பதவிக்குத் தகைமையுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. வகை II ஐச் சேர்ந்த எழுதுமட்டுவாழ் ஸ்ரீகணேசா வித்தியாலயம், மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம், கைதடி நாவற்குழி அ. த. க. பாடசாலை மற்றும் வகை 111 ஐச் சேர்ந்த நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயம், மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயம் ஆகியவற்றில் காணப்படும் அதிபர் பதவி வெற்றிடங்களுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. உரிய விண்ணப்பப் படிவத்தினை வலய அலுவலகத்தில் பெற்றுப் பூர்த்தி செய்து மார்ச் 14 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு அஞ்சலில் அனுப்பிவைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.


(ச-25,9)


## வேலையாட்கள் தேவை

மானிப்பாய் வீதி ஆறுகால் மடத்தில் அமைந்துள்ள பூங்கன்றுக் கடை ஒன்றிற்கு பெண் வேலையாட்கள் தேவை. 3 Km க்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

075 944 4601


## மரண அறிவித்தல்



தாயின் மடி 08 . 05 . 1938

இறைவன் அடி 02 . 03 . 2025

### சின்னட்டியர் பொன்னம்பலவாணர்

(ஓய்வு பெற்ற இறைவரித் திணைக்கள அதிகாரி-கொழும்பு பிரசித்த நொத்தாரிசு, அகில இலங்கை சமாதான நீதவான்)

மீசாலை கிழக்கு, மீசாலையை பிறப்பிடமாகவும், டொரோண்டோ, கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னட்டியர் பொன்னம்பலவாணர் அவர்கள் கடந்த 02-03-2025 ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னட்டியர்-இலட்சுமிப்பிள்ளை தம்பதியின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சண்முகம்-அன்னம்மா தம்பதியின் அன்பு மருமகனும்,

நாகேஸ்வரியின் அன்பு கணவரும் வித்தியபாஸ்கரன், காலஞ்சென்ற நகுலபாஸ்கரன் மற்றும் அன்பரசி, சுந்தரமலர், செந்தாமரை ஆகியோரின் பாசமிகு தந்தையும் வளர்மதி, ஜெயபரன், பிரதீபன், கிரிதரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் செந்தூரி, செந்தூரன், ஜெயனி, ஜெயசன், ஜெயராம், அருளினி, அருளவன், கீர்த்திகன், கிருத்திகா ஆகியோரின் பாசமிகு பேரனும் சரஸ்வதி, தவமணி, மங்கையர்க்கரசி, காலஞ்சென்ற வடிவாம்பிகை, மற்றும் கணேசமூர்த்தி, அமிர்தாம்பிகை ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை மற்றும் கணேசரட்ணம், சிவகுமாரன், காலஞ்சென்ற குகேந்திரன் மற்றும் யோகமனோகரி, குமாரசாமி ஆகியோரின் சகலனும் முருகதாஸ், வித்தியதாசன், சிவகௌரிகா, சாதனன் மிதுனன், கார்த்திகன், பிரகஸ்பதி, பிறையோன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (08.03.2025) சனிக்கிழமை மாலை 05:00 - இரவு 09:00 வரை, , (09.03.2025) ஞாயிற்றுக்கிழமை, மு.ப 07:00 - மு.ப 08:00 வரை Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Avenue, Markham, Ontario, L3R 5G1 என்னும் இடத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் (09.03.2025) ஞாயிற்றுக்கிழமை மு.ப 08.00-மு.ப 10.00, Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Avenue, Markham, Ontario, L3R 5G1 என்னும் இடத்தில் நடைபெற்று பூதவுடல் (09.03.2025) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10:30 க்கு North Toronto Crematorium Inc., 2 Stalwart Industrial Drive, Gormley, Ontario L0H1G0 எனும் இடத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**தொடர்புகளுக்கு:**
பொ. வித்தியபாஸ்கரன் +1-647-244-4752, ஜெ. அன்பரசி +1-416-558-1419
பி. சுந்தரமலர் +1-647-267-2323, கி. செந்தாமரை +1-647-688-6642
சி.வித்தியதாசன் 077 285 2967

தகவல்:
குடும்பத்தினர்

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்



தோற்றம் 20 . 10 . 1959

மறைவு 04 . 03 . 2025

### கோவிந்தசாமி ரங்கநாதன்

ஓட்டுமடம் யாழ்ப்பாணத்தினை பிறப்பிடமாகவும், தலையாழி, கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட பிரபல கருங்கல் சிற்பாசாரியார் கோவிந்தசாமி ரங்கநாதன் (நாதன்) அவர்கள் நேற்று (04.03.2025) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோவிந்தசாமி - சிவகாமி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பரமேஸ்வரி தம்பதியரின் மருமகனும், வசந்தி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சுஜிதரன், விதுஷன் மற்றும் நிரோஜன், தனுஷன், தாட்சாயினி, கேனுஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜனார்த்தன், தர்ணிகா ஆகியோரின் மாமனாரும், கிருஷ்ணசாமி, இராசலெட்சுமி, நாராயணசாமி, பாக்கியலெட்சுமி, ஜெயலட்சுமி, விஜயலட்சுமி காலஞ்சென்ற ஸ்ரீதரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலம் சென்ற சாந்தி மற்றும் ஜெயந்தி, ரவிச்சந்திரன், மூர்த்தி, அனுஷியா, லோகேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.03.2025) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 02.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல 55/12, தலையாழி வீதி,
கொக்குவில் மேற்கு.

தகவல் :
குடும்பத்தினர்
077 583 9806, 077 053 6503

(CS/57658) J-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி இல. 361 இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.03.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.